விலை ரூபா 1-00 ★

றிக்கோ

யாழ். நகரில் சுகாதாரமானதென
முதற் பரிசு பெற்ற
றிக்கோவுக்கு
வேறு கிளைகள் இல்லை
றிக்கோ
சுவீற் அன் கிறீம் ஹவுஸ்
யாழ்ப்பாணம்.
4529

# ஈழநாடு
THE EELANADU

றிக்கோ

யாழ். நகரில் சுகாதாரமானதென
முதற் பரிசு பெற்ற
றிக்கோவுக்கு
வேறு கிளைகள் இல்லை
றிக்கோ
சுவீற் அன் கிறீம் ஹவுஸ்
யாழ்ப்பாணம்.
4529

மலர் 24 ஆவணி 31 ஜுல்கஃ 27 இதழ் 215
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 16—9—82

# ரூ 27 லட்சம் வங்கியில் கொள்ளை

## துப்பாக்கிமுனையில் மூவர் கைவரிசை

(வவனியா)

ஹெப்பிட்டிப்பொல மக்கள் வங்கியில் பதினைந்து லட்சம் ரூபா பெறுமதியான நகைகளும், 12 லட்சம் ரூபா ரொக்கப்பணமும் நேற்றுஅதிகாலைகொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை 8 மணிக்கும், 9 மணிக்குமிடையில் வங்கிக்குள் புகுந்த மூன்று பேர் திடீரெனசுழல் துப்பாக்கியைக் காட்டி பயமுறுத்தி இந்தக் கொள்ளைகளை நடத்தினர்களாம்,

வெண்மஞ்சள் நிறமான காரில் வந்திறங்கிய இவர்கள், மின்னல்வேகத்தில் தமது வேலையைக் 'கச்சிதமாக' முடித்துக்கொண்டு அதே காரில் பறந்துவிட்டார்களாம்!

அனுராதபுரம் பொலிசார் தேடுதல் வேட்டையில் தீவிரமாக இறங்கியுள்ளனர், நாடெங்கிலுமுள்ள பொலிஸ் நிலையங்களுக்கும் தகவல் அறிவிக்கப்பட்டுள்ளது.

வங்கி ஊழியர்களை துப்பாக்கிமுனையில் பயமுறுத்தி, பாதுகாப்புபெட்டியை திறக்குமாறு நிர்ப்பந்தித்து, பணத்தையும், நகைகளையும்கொள்ளையடித்துச் சென்றதாக கூறப்படுகிறது,

மூவரும், சிகப்புநிறக்காரில், மதவாச்சிநோக்கி சென்றுள்ளதாகவும் மேலும் கூறப்படுகிறது. (க)

### விடுதலையான 10 தமிழ் இளைஞர்கள்

## யாழ். குடாநாட்டைவிட்டு வெளியேற 3 மாதத்துக்கு தடை

[யாழ்ப்பாணம்]

பனாகொடை இராணுவ தடுப்புமுகாமிலிருந்து கடந்த ஜூன் மாதம் விடுதலைசெய்யப்பட்ட 10 தமிழ் இளைஞர்களையும், மேலும் 3 மாதங்களுக்கு யாழ். குடாநாட்டை விட்டு வெளியேறக்கூடாதென தடை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூன் 8-ம் திகதி விடுதலைசெய்யப்பட்ட பத்துத் தமிழ் இளைஞர்களுக்கும் குடாநாட்டை விட்டு 3 மாதங்களுக்கு வெளியேறக்கூடாதென எழுத்துமூலம் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது

அந்த உத்தரவு இம்மாதம் 7-ம் திகதியுடன் முடிவடைந்ததை தொடர்ந்து மேலும் மூன்று மாதங்களுக்கான தடை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.

பிரதி பாதுகாப்பு அமைச்சர் இந்த உத்தரவை வழங்கியுள்ளார். [மா)

## ஆனந்தசங்கரி இடத்துக்கு மற்றுமொரு உறுப்பினர்?

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்ட அபிவிருத்தி சபையின் கூட்டங்களுக்கு சமுகமளிக்காத கிளிநொச்சி எம் பி. திரு. வி. ஆனந்தசங்கரியின் இடத்திற்குப் புதிய உறுப்பினர் ஒருவர் நியமிக்கப்படுவாரா என்ற கேள்வி எழுந்துள்ளது!

யாழ் மாவட்ட அபிவிருத்தி சபைக் கூட்டம் நேற்று நடந்த போது மாவட்ட சபைத் தலைவர் திரு சு. நடராசா இதனை சூசகமாகத் தெரிவித்தார்.

கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி பலகாலமாக சபைக்குவரவில்லையென்றும் இந்த இடத்திற்கு இன்னொருவரை நியமிக்கும் நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளோம் என்றும் யாழ். மாவட்டசபை தலைவர் திரு. சு. நடராசா தெரிவித்தார். (மா)

### ★ மகாதேவா தாம்போதி அமைப்பு வேலைகள்:

## நிதிஒதுக்கீடு: யாழ் அபிவிருத்திசபையில் அமளிதுமளி! அங்கத்தவர்கள் எதிர்ப்பு!!

### தீர்மானம் நிறைவேறுமலே ஒத்திவைக்கப்பட்டது!!!

[ஏ. வி. மாணிக்கம்]

மகாதேவா தாம்போதி அமைப்பு வேலைகளுக்கு மேலும் எட்டு லட்சம் ரூபாவை, சபை நிதியிலிருந்து ஒதுக்குவது, சம்பந்தமானபிரேரணைநேற்றுநடைபெற்ற மாவட்ட அபிவிருத்தி சபையின் பொதுக்கூட்டத்தில் எடுத்தபோது, உறுப்பினர்களுள் ஒரு சிலர் ஆவேசமாக எதிர்த்து வாதிட்டபோது சபையில் அமளிதுமளி ஏற்பட்டது.

''எதுவிதத்திலும் பணம் பெற்ருவது மகாதேவா பாலத்தை ஒப்பேற்ற வேண்டும்; இதற்கு உறுபினர்கள் ஒத்துழைப்புத்தர வேண்டும்'' என்று அபிவிருத்தி சபைத் தலைவர் கேட்டுக் கொண்டபோதிலும், மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு ஒதுக்கப்பட்டபணத்திலிருந்து ஒரு சதமேனும் மகாதேவா பால வேலைகளுக்கு எடுக்கவிடமாட்டோம் என்று அங்கத்தவர்கள் தெரிவித்தனர்.

தலைவர் ஒழுங்கை நிலைநாட்ட மிகுந்த கிரமப்பட வேண்டியிருந்தது.

இந்த நிலையில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும், நல்லூரர் எம். பி. யுமான திரு. எம். சிவசிதம்பரம் ''தீர்மானம் நிராகரிக்கப்பட்டதாக இருக்கக்கூடாது. அடுத்தகூட்டத்தில் முடிவு செய்வோம்'' என்று விவாதத்துக்கு முற்றுப் புள்ளி வைத்தார்.

யாழ். செயலகத்திலுள்ள சபாமண்டபத்தில் அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. சு. நடராசா தலைமையில் நேற்றுக்காலை 11 மணிக்கு இப்பொதுக்கூட்டம் ஆரம்பமானது,

[8ம் பக்கம் பார்க்க]

## ஜனதிபதி தேர்தலில் முன்னள் உதவி அமைச்சர்

(கொழும்பு)

மற்றுமொருமுன்னள் உதவி அமைச்சரானதிரு முதியான்சே தென்னக்கோன் நேற்று ஜனதிபதித் தேர்தலுக்கு சுயேட்சை வேட்பாளராகப் போட்டியிடுவதற்கானகட்டுப்பணம்75,000 ரூபாவைச் செலுத்தினர்.

ஶ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சிக்காலத்தில் இவர் உதவி அமைச்சராக இருந்தவர்.

ஜனதிபதி தேர்தலுக்கு கட்டுப்பணம் செலுத்திய ஆருவது நபர் இவராவார். (இ)

### யாழ். அலுவலகம்

## 20 'பாஸ்போட்' விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கடவுச்சீட்டு (பாஸ்போட்) அலுவலகம் திறக்கப்பட்ட நேற்றையதினமே 20 'பாஸ்போட்' புத்தகங்கள் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (மா)

### அச்சுவேலி கொலைச் சம்பவம்:

## "மூன்றுராணுவத்தினர்மீதும் நடவடிக்கை எடுக்கவேண்டாம்

### சட்ட மாஅதிபர் பணிப்பு

(மாவிட்டபுரம்)

அச்சுவேலியில் வீதியால் சென்றவரை சுட்டுக்கொலை செய்த சம்பவம் தொடர்பாக றிமாண்டில் வைக்கப்பட்டுப் பின்னர் பிணையில்விடப்பட்ட 3 இராணுவத்தினர் மீதும் மேல்நடவடிக்கை எதுவும் எடுக்கவேண்டாமென சட்ட மாஅதிபர் பணித்துள்ளார்.

அச்சுவேலியில் சைக்கிளில் வீதியால் சென்றுகொண்டிருந்த கந்தையா நவரத்தினம் என்பவரை சுட்டுக்கொலை செய்த சம்பவம் கடந்த பெப்ரவரிமாதத்தில்இடம்பெற்றிருந்தது.

இம்மரணம் தொடர்பாக மல்லாகப் நீதிபதி திரு. சீ. வி. விக்னேஸ்வரன் மரண விசாரணை நடத்தி இது ஓர் கொலை என தீர்ப்பளித்து சந்தேகநபர்களான பலாலி இராணுவமுகாமைச் சேர்ந்த லெப்டினன்ட் மண்டுகொடி, டி. சேரம், இராணுவசிப்பாய்கள் கே. ஜே. சில்வா, ஆர். சி. பி. சில்வா ஆகிய மூவரையும் றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டிருந்தார்.

ஆனல் இவர்களைப் பிணையில் விடுமாறுகோரி யாழ். மேல் நீதிமன்றத்தில் பிணைமனு தாக்கல்செய்யப்பட்ட சமயம் பிணைக்கு அனுமதி கிடைத்ததால் மூவரும் பிணையில்செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

(8-ம் பக்கம் பார்க்க)

நல்லூர் - வீடு - விற்பனைக்கு

கச்சேரி நல்லூர் ரேட்டில் முத்திரைச் சந்தைக்கு அண்மையில் 3 பரப்புக் காணியில் கிணற்றுடன் வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு: 54, Hamer's Avenue, வெள்ளவத்தை கொழும்பு. போன்: 588590. [4507]

# வரி விளம்பரம்

### தேவை

யாழ்நகரில் தனியார் ஸ்தாபனம் ஒன்றுக்கு அனுபவமும் திறமையும் மிக்க நிர்வாக முகாமையாளர் தேவை உடன் நேரில் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: டில் கா பேணிசிங் பலஸ், 234 236, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (4537)

தராதரப்பத்திரம் பெற்ற அனுபவமுடைய ஆயுர் டாக்டர் உடன் தேவை. தகுதிக்கு ஏற்ப வேதனம் வழங்கப்படும். 20-9-82 திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும். Dr. S A. சந்தியாப்பிள்ளை. 40, பழைய பூங்கா வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். (4524)

அலுமினிய தொழிற்சாலைக்கு நல்ல அனுபவம் வாய்ந்த ஸ்பின்னர்கள் (Spinnar) தேவை நேரில் வரவம். 118, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (4521)

### விற்பனைக்கு

உரும்பிராய் கிழக்கில் வீதியோரத்தில் மூன்றரைப் பரப்புக் காணி, கல்வீடு கிணற்றுடன் விற்பனைக்குண்டு, விபரங்களுக்கு: M. புஸ்பராசா, G. P. S, ரேட், கல்வியங்காடு, யாழ்ப்பாணம். (4522)

வண்ணார்பண்ணை கோபால் ஒழுங்கையில் (நாவலர் சந்திக்கு அண்மையில்) ஒன்றரைப் பரப்புக் காணியுடன் சேர்ந்த மின்சாரம், கிணறு வசதியுடன் கூடிய கல்வீடு விற்கப்படும். நேரில் தொடர்பு கொள்க. இரா. பாலசிங்கம், 'ஸ்ரீ முருகவாசா', 23, கோபால் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (4530)

### வகுப்புகள்

தட்டச்சு, சுருக்கெழுத்து வகுப்புகள் ஆரம்பம் 20-9-82, ஐலன்ட் இன்ஸ்ரியூட், விகாரை எதிரில், 58, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். (4531)

### பயிற்சி

வெல்டிங், வயறிங், மோட்டார் றிவைன்டிங் மோட்டார் இயந்திரவியல் செய்முறையுடன் பயிற்சி வகுப்புக்கள் 19-9-82 இல் ஆரம்பம். C. E. T. ஐலண்ட் இன்ஸ்ரிரியூட், (விகாரைக்கு சமீபமாக), 58, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (4528)


## மன்னார் செய்திகள்

நமது நிருபர்

(மன்னார்)

மன்னார் மாவட்ட அபிவிருத்திசபையின் பெருங்களிப்பற்று உப ஆலுவலக ஆலோசகர்களாக தி ம. கிறிஸ்தியான், திரு. இ. நாகமுத்து, ஜனப் நாகூர் பிச்சை முகமது சுல்தான் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்நியமனங்கள் யாவும் மன்னார் மாவட்ட அபிவிருத்திசபையினால் வழங்கப்பட்டது.

### ப. நோ. கூ. சங்க கிளைத் தேர்தல்

மாந்தை தெற்கு பல நோ. கூ. சங்கத்தின் கிளைகளுக்கான குழுத் தேர்தல்கள் அடுத்த மாதம் 22ம் திகதி நடைபெறும்.

இத்தேர்தல்கள் உயிலங்குளம் பறப்பான்கண்டல், கள்ளிக்கட்டைக்காடு, புதுக்கமம் ஆகிய கிளைகளில் நடைபெறும்.

### நடவடிக்கை

மன்னார் பகுதியில் அரசாங்க காணியில் சட்டவிரோதமாகக் குடியேறி. காணிகளை ஆக்கிரமித்துக்கொண்டவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகளைமன்னார் காணித்திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

### பஸ்சேவை

முசலிப் பகுதி நோயாளர்களின் நலன்கருதி மன்னார் சிலாவத்துறை, அரிப்புத்துறை பஸ் சேவைகள் சிலாவத்துறை பஸ் சேவைகள் சிலாவத்துறை அரசினர் வைத்தியசாலை வரை நடத்தப்படும். இதற்கான நடவடிக்கைகளை முசலிப்பகுதி பிரதேச சபை தலைவர் ஜனப் அஸீஸ் மேற்கொண்டு வருகிறார்.

### காலமானர்

கடந்த இரு மாதங்களாக கடும் சுகவீனமுற்றிருந்த மன்னார் – தாராபுரம் கிராமாட்சி மன்றத்தின் முன்னாள் தலைவரும், மன்னார் மாவட்ட முன்னாள் சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் அமைப்பாளருமான ஜனப் சேகு தாவுத் கடந்த ஞாயிற்றுக்கிழமைகாலமானர்.

### தடை

மன்னார்–கட்டுக்கரை குளப்படுக்கையில் சட்டவிரோதமாக விவசாயம்செய்வது இவ்வருடம்முதல் தடைசெய்யப்படும். தடையைமீறி கட்டுக்கரை குளப்படுக்கையில் விவசாயம் செய்யவென உழவு வேலைகள்ஆரம்பிக்கப்பட்டால் உழவு யந்திரங்கள் பறிமுதல் செய்யப்படும். இரகசியமாக உழவு வேலை ளை முடித்து நெல் விதைக்கப்பட்டால் இறுதியில் விளைச்சல்காலம் பறிமுதல் செய்யப்படும்.

இவ்வாறு கடந்த திங்கட்கிழமை உயிலங்குளத்தில் மன்னார் அரசாங்க அதிபர் திரு. டி. வாமதேவன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

### ஆறு திட்டங்கள்

மன்னார் மாவட்டத்தில் 6 திட்டங்களை ஆரம்பித்த அகில உலகதரிசனம்மேலும்5திட்டங்களை மன்னார் மாவட்டத்திலேயே ஆரம்பிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

அகில உலக தரிசனம் மன்னார் மாவட்டத்தில் ஏற்கனவே ஆரம்பித்த திட்டத்தின்கீழ் தாராபுரம், இலுப்பைக்கடவை, நீலாசேனை, குழாங்குளம், பிசசை குளம், பாலம்பிட்டி ஆகிய கிராமங்களில் கோழி, ஆடு வளர்ப்புக்கு மேட்டு நிலப் பயிற்செய்கைக்கும் கடனுதவி வழங்கப்பட்டது.

### மன்னாரில் றேகண

மன்னாரில் மக்கள் விடுதலை முன்னணியின் ஜனதிபதி தேர்தல் பிரசாரக்கூட்டம் இம்மாதம் 30 திகதிநடைபெறும். இத்தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் றேகண விஜயவீர, திரு. போபகே ஆகியோர் கலந்துகொண்டுஉரையாற்றுவார்கள்.

## சாவ. நகரசபையில் புதிய உறுப்பினர்

[சாவகச்சேரி]

சாவகச்சேரி நகரசபையின ஐக்கியதேசியக் கட்சி உறுப்பினர் திரு. ப. வே. இராசரத்தினத்தின் ராஜினமாவைத் தொடர்த்து திரு. தம்பு நல்லையா ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினராகக் சாவகச்சேரி நகர சபையில் நியமனம் பெற்றுள்ளார்.


## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


## ரயிலில் பயணம் செய்த

# வெள்ளைக்காரப் பெண்ணிடம் கைவரிசைகாட்டிய திருடர்!

[மன்னார்]

கொழும்பிலிருந்து தலைமன்னார் நோக்கி வந்த ரயிலில் பிரயாணம்செய்த வெள்ளைக்காரப் பெண்ணின் பிரயாணப் பையைத் திருடிக் கொண்டோடிய திருடர்கள் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இச் சம்பவம்பற்றி தெரிவிக்கப்படுவதாவது:

கொழும்பிலிருந்து தலைமன்னார் நோக்கிவந்த ரயில் தோட்டவெளி ரயில்நிலையத்தில் நின்றதும் ஒருவர் பிரயாணப்பையுடன் இறங்கி ஓட்டம் எடுத்தாராம்! இதனை அவதானித்த தோட்டவெளி ரயில்நிலைய அதிபர் ஜனப் ஏ. ஜி. ஏ. றபீக், போட்டர் ஜனப் அப்துல்சலாம் ஆகியோர் பிரயாணப்பையுடன் ஓடியவரைத் துரத்திச்சென்றனர். பிரயாணப் பையுடன் ஓடியவர் பிரயாணப் பையை போட்டுவிட்டு காட்டிற்குள் ஓடிமறைந்தார்.

பிரயாணப்பையை கைப்பற்றிய ரயில் நிலை அதிபர் ரயில்நிலையத்திகு வந்ததும் ரயிலில் பிரயாணம்செய்த ஐரோப்பியப் பெண்மணி ஒருவர் அப் பிரயாணப்பை தன்னுடையதென தெரிவித்தார்.

இதனையடுத்து பிரயாணப்பை ஐரோப்பியப் பெண்ணிடப் ஒப்படைக்கப்பட்டது.

ரயில் தோட்டவெளி ரயில் நிலையத்தைவிட்டுப்புறப்பட்டதும் ரயில்நிலைய அதிபர் தமது சக ஊழியர்களுடன் காட்டில் பலத்த தேடுதலில் ஈடுபட்டபோது பிரயாணப் பையைத் திருடிய திருடன் அகப்பட்டான். இத் திருடனை விசாரணைசெய்தபோது தன்னுடன் உதவிக்கு இன்னுமொருவர் வந்தார்எனத் தெரிவித்தான். திருடர்கள் மன்னார்ப் பொலிசில் ஒப்படைக்கப்பட்டனர்.

# "கந்தபுராணம் கூறும் படிப்பினை: நன்றி மறந்தவருக்கு மீட்சி இல்லை!"

[சாவகச்சேரி]

"சிவனே முருகன், முருகனே சிவன் என்பதுதான் கச்சியப்பர் கந்தபுராணத்தின் மூலம் எமக்குத்தந்த கருத்தாகும். சூரபத்மனுக்குச் சிவபெருமான் கொடுத்த வரங்களையெல்லாம் சூரபத்மன் மறந்து சிவபெருமானின் திருமகனாகிய முருகப்பெருமானைப் பகைத்தமை நன்றி மறந்த செயலாகும்."

மீசாலை வடக்கு இராமாசில் கந்தசுவாமிகோவில் மகாகும்பாபிஷேக இறுதிநாள் விழாவில் வள்ளிதிருமணம் உரையாற்றிய ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையாமேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

ஒவ்வொரு புராணமும் ஒரு முக்கிய போதனையை அளிக்கிறது. வாய்மையின் மேன்மையை விரிவுபடுத்துவது அரிச்சந்திரபுராணம். பெண்ணாசையின் தீமையை விளக்குவது இராமாயணம். மண்ணாசையின் தீமையை விளக்குவது பாரதம். கந்தபுராணம் கூறும் முக்கிய படிப்பினை ஒருவன் செய்த நன்றியை மறந்தவருக்கு மீட்சி இல்லை என்பதாகும்.

வள்ளி என்பது ஜீவாத்மா. ஜீவாத்மாவை பரமாத்மா ஆட்கொண்ட தத்துவமே வள்ளி திருமணமாகும். ஜிவாத்மா ஐம்புலவேடரிடையே வளர்து வருகிறது. முருகனகிய பரமாத்மா ஜீவாத்மா ஆகிய வள்ளியை ஐம்புலன்களாகிய வேடரினின்றும் விடுவித்துத் தம்மோடு சேர்த்துக் கொள்கிறர். இதுவே முத்தி நிலையுமாகும்" என்றார்.

## நாயன்மார் குளம் சிரமதானமூலம் ஆழமாக்கப்படும்

(அரியாலை)

நாயன்மார் குளத்தின் ஒரு பகுதியைச் சரமதானத்ன் மூலம் ஆழமாக்குவதென்று அரியாலை மேற்கு கிராமோதய சங்கக்கூட்டத்தில் ஏகமனதாகத்தீர்மானிக்கப் பட்டது.

யாழ். கனகரத்தினம் மத்திய மாக வித்தியாலயத்தில் கிராமோதய சபைத் தலைவர் திரு. கருணைநாதன் ஜே. பி தலைமையில் கிராமோதய சபைக் கூட்டம் நடைபெற்றது.


# அறிவித்தல்

வாடிக்கையாளர்களின் வசதிக்காக நாம் எமது யாழ். கிளையின் களஞ்சியம் ஒன்றை

கிளிநொச்சி, கண்டி வீதியிலுள்ள A. K. R. கட்டிடத்தில்

திறந்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

உங்களுக்குத் தேவையான

## உரவகைகள், தெளிகருவிகள், கிருமிநாசினிகள்

யாவற்றிற்கும் யாழ். கிளையுடன் தொடர்பு கொண்டு பொருட்களை களஞ்சியத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம்

**A. BAUR & CO LTD,** (Jaffna Branch)
NO: 5, CLOCK TOWER ROAD, JAFFNA.

**ஏ. பவர் அன் கோ. லிமிட்,** (யாழ். கிளை)
இல: 5, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

TELE PHONE: 7156, 7651 :தொலைபேசி

4517

# லெபனான் ஜனாதிபதி கமாயல் குண்டு வெடிப்பில் பலி!

## நீண்ட தேடுதலின் பின் சடலம் மீட்கப்பட்டது

பெய்ரூட், செப். 15

**லெபனானின் புதிய ஜனாதிபதியாக கடந்த மாதம் தெரிவு செய்யப்பட்ட திரு. பஷீர் கமாயல் குண்டு வெடிப்பொன்றில் நேற்று உயிரிழந்தார்.**

கிழக்கு பெய்ரூட்டிலுள்ள தமது கட்சித் தலைமையகத்தில் அங்கத்தவர்களுடன் உரையாடிக் கொண்டிருக்குப்போதே திரு. கமாயல் குண்டு வெடிப்பிற்கு இலக்கானார். இக்குண்டு வெடிப்பில் மேலும் 60 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்தக்குண்டுவெடிப்புச் சம்பவத்தில் யார் ஈடுபட்டனர் என்பது இன்னும் தெளிவாக அறியப்படவில்லை.

34 வயதான திரு. பஷீர்கமாயல் கிறிஸ்தவ சமயத்தவராவார். இவரது தந்தையும் லெபனானின் ஜனாதிபதியாக முன்பு பதவி வகித்தார். வழக்கறிஞரான திரு. கமாயல் வலதுசாரிக் கிறிஸ்தவப்படையில் அங்கம் வகித்து தமது இயக்கத்தின் தளபதியாக 1975–76ல் நடைபெற்ற லெபனான் உள்நாட்டுப்போரில் பங்கெடுத்தார்.

திரு. பஷீர் கமாயல் கடந்த மாதம், ஜனாதிபதித்தேர்தலில் இஸ்லாமியக்கட்சிகள் சமூகமளிக்காததால் வலதுசாரிக் கிறிஸ்தவ கட்சியால் ஏகமனதாக லெபனான் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டார். இவரது இந்த தெரிவு குறித்து லெபனானில் பல இஸ்லாமிய சக்திகள் அதிருப்தி கொண்டிருந்தன.

துணிவும், தீர்க்கமான முடிவுகளை எடுப்பதில் வல்லவராயும் விளங்கிய திரு. பஷீர் கமாயல் இம்மாதம் 23ந் திகதியே தமது ஜனாதிபதிப் பதவியை தற்போதைய ஜனாதிபதி திரு. எலியாஸ் சர்க்கீஸிடமிருந்து உத்தியோகபூர்வமாகப் பெற்றுக் கொள்ளவிருந்தார்.

திரு. பஷீர் கமாயல் கொல்லப்பட்ட இடமான கிழக்கு பெய்ரூட்டிலுள்ள அவரது கட்சித் தலைமையகம் மூன்றுமாடிகளைக் கொண்டதாகும். இது இக்குண்டு வெடிப்பால்மிகவும் சின்னாபின்னமாகியுள்ளது. திரு. கமாயலின் உடல் நீண்டநேர தேடுதலின்பின்னரே இக்கட்டிடத்தின் இடிபாடுகளுக்கு மத்தியிலிருந்து மீட்கப்பட்டது. (கி)

## அண்ணாவின் 74வது பிறந்ததினம்

(சென்னை)

அறிஞர் அண்ணாவின் 74வது பிறந்ததினமானநேற்று தமிழ் நாட்டின் நகர்ப்புறங்களிலுள்ள பள்ளிச் சிறுவர்களுக்கான இலவச சத்துணவுத் திட்டம் அமுலுக்குவந்தது. (வெ)

மேற்காசியாவுக்கு

## புதிய பிரதிநிதி நியமனம் பிலிப்ஹபிப்புக்கு கௌரவம்

லண்டன், செப். 15

அமெரிக்க அதிபர் திரு றொனல்ட் றீகனின் புதிய மேற்காசியத் தூதராக திரு மொரிஸ் கிரெப்பர் என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு மொரிஸ் கிரெப்பர் நேற்றுமுன்தினம் ரெல் அவிவ் சென்று இஸ்ரேலியப் பிரதமர் திரு. பெகின், வெளிவிவகார அமைச்சர் திரு. ஷமீர்ஆகியோருடன் பேச்சுவார்த்தைகளை நடத்தினர். பெய்ரூட்டுக்கும் இவர் அடுத்து விஜயம் செய்தார்.

அமெரிக்க அதிபரின் மேற்காசியப்பிரதிநிதியாகக்கடமையாற்றிய திரு. பிலிப் ஹபிப் தமது அலுவல்களை முடித்துக் கொண்டு நாடு திரும்பியுள்ளார். அமெரிக்க அரசியலில் பெரும் பங்கு வகித்த திரு. ஹபிப்பின் உதவியை திரு. றீகன் மட்டுமல்லாது அமெரிக்க ஜனாதிபதிகள் சிலர் முன்பும் நாடியுள்ளனர்.

தற்போது ஏற்பட்ட மேற்காசியத்தகராறில்பெரும்பங்கு வகித்து நாடு திரும்பிய திரு. பிலிப் ஹபிப்பைக்கௌரவிக்குமுகமாக அமெரிக்க அதிபர் றீகன் அவருக்கு அமெரிக்காவின் பெறுமதி மிக்க தேசிய விருதொன்றை வழங்கிக் கௌரவித்துள்ளார். (கி)

## உலகசந்தையில் சீனிவிலை வீழ்ச்சி!

லண்டன், செப். 15

உலக சந்தையில் ஒருதொன் சீனியின் விலை 83ஸ்டேர்லிங் பவுண்களாக வீழ்ச்சியடைந்துள்ளது.

அண்மைக்காலங்களில் சீனி உற்பத்தி கூடியும், பாவனை குறைவடைந்துமிருப்பதே இதற்கு காரணமென்று தெரிவிக்கப்பட்டது.

1974ம் ஆண்டில் சீனிக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவிய போது இதன் விலை உலக சந்தையில் ஒருதொன்6?0 ஸ்டேர்லிங் பவுண்களாக விருந்ததென்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது ஐரோப்பிய நாடுகளில் சோளத்திலிருந்து சீனி உற்பத்தி செய்யப்படுவதும் பெருமளவு அதிகரித்துள்ளமை சீனி விலை வீழ்ச்சிக்குக் காரணமாக இருக்கின்றதென்றும் தெரிவிக்கப்பட்டது. (கி)

## கேரளாவில் பஸ்விபத்து: 10 பேர் பலி!

திருவனந்தபுரம், செப். 15

திருச்சிராப்பள்ளியிலிருந்து கல்விச்சுற்றுலா மேற்கொண்ட பள்ளிமாணவர்களை ஏற்றிவந்த பஸ் கேரளாவின் இடுக்கிமலைச் சாரலில்தடம் புரண்டதால் இந்த வண்டியில்வந்த இரண்டு மாணவர்கள் உட்பட பத்துப் பேர் கொல்லப்பட்டனர்.

இறந்தவர்களில் ஐவர் ஆசிரியர்களென்றும், இருவர்மாணவர்களென்றும்பேலும் இருவர் பஸ்வண்டி நடத்துனர்களென்றும், மற்றையவர் இவ் வண்டி மோதிய சைக்கிளோட்டியென்றும் தெரிவிக்கப்பட்டது.

இடுக்கி மலைப்பகுதியில்இந்த பஸ்வண்டி சென்றுகொண்டிருந்த போதுசைக்கிளோட்டியொருவருடன் இது மோதிய தாலேயே விபத்துஏற்பட்டது. இந்த விபத்தில் 44 பேர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி சுந்தர ஷீலா நாயர் இறந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ஆயிரம் ரூபா வழங்குவதாக அறிவித்துள்ளார். அத்துடன் திருச்சி துணை கலெக்டர் ஒருவருடன் இவ் விபத்தில் சிக்கியவர்களின் பெற்றோர்கள் இடுக்கிமலைப் பகுதிக்கு வான் வண்டிகளில் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். (கி)

## "புடவை இறக்குமதியை தடைசெய்யவும்!"

### அதிபர் றீகனிடம் கோரிக்கை

வாஷிங்டன், செப். 15

புடவை உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் அமெரிக்கா ஆசியநாடுகளிலிருந்து புடவை வகைகளை இறக்குமதி செய்வதை நிறுத்தவேண்டுமென்று காங்கிரஸ் செனட் உறுப்பினர்கள் நேற்று வெள்ளை மாளிகையில் அதிபர் றொனல்ட் றீகனைச்சந்தித்து உரையாற்றினர்.

இந்த உறுப்பினர்களின் ஆலோசனைகளைக் கேட்டறிந்த திரு. றீகன் இவர்களின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டுள்ளார்,

சீனாவே அமெரிக்காவுக்கு புடவைவகைகளை அதிக அளவில் ஏற்றுமதி செய்யும் ஆசிய நாடாக விளங்குகின்றது. அமெரிக்கா இவ்வாறு ஆசிய நாடுகளிலிருந்து புடவைத் துணிகளை இறக்குமதி செய்வதால் உள்நாட்டில் இவ்வுற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதாக திரு. றீகனிடம் அவரைச்சந்தித்த உறுப்பினர்கள் சுட்டிக் காட்டினர்.

இந்த உறுப்பினர் குழுவில் தென் கரோலினா மாநிலத்தின் குடியரசுக்கட்சிஉறுப்பினரான திரு. சம்பல்என்பவரும் கலந்து கொண்டு பேச்சுவார்த்தைகளில் முக்கிய பங்கெடுத்தார். (கி)

## "பாரதியின் தேசபக்தியை மதித்துப்பின்பற்றுவோம்"

### - கிளிநொச்சி எம். பி.

(கிளிநொச்சி)

தேசவிடுதலைக்குப் பாடுபட்ட பாரதியின் கொள்கைகளையும் இலட்சியங்களையும் நாமும் பின்பற்ற வேண்டும் என்று கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி கிளிநொச்சி 8ம்வாய்க்காலில்நடைபெற்ற பாரதிவிழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

இப்பகுதி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் நடத்திய இவ்விழாவில் திரு. ஆனந்தசங்கரி எம். பி. மேலும் பேசுகையில், பல்வேறு இன்னல்களை அனுபவித்துவரும் தமிழ் மக்களாகிய நாமும் பாரதியின் தேசபக்தியைமதித்துபின்பற்ற வேண்டும் என்றார்.

திரு. இ. கிருஷ்ணராசாஉட்பட வேறு பலரும் உரையாற்றினர்கள். கவியரங்கு, பட்டிமன்றம், கலை நிகழ்ச்சிகளும் விழாவில் இடம்பெற்றது.

## காஷ்மீர் அமைச்சரவை பதவியேற்றது

புதுடில்லி. செப். 15

காஷ்மீரின் புதிய அமைச்சரவை பதவியேற்றது. முன்னாள் முதலமைச்சர் ஷேக் அப்துல்லாவின் மகன் பாரூக் அப்துல்லா தலைமையிலான இவ் அமைச்சரவையில் 10பேர் இடம் பெற்றுள்ளனர். (வெ)

## 12 ஓட்டங்களால் இலங்கை புதுடில்லியில் வெற்றி!

### பந்துல 51, றேய்டயஸ் 81

புதுடில்லி, செப். 15

புதுடில்லியில் கிரிக்கெட் விளையாட்டுக்கழகத்துடன் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக்கொண்ட கிரிக்கெட் பந்தயத்தில் மோதிய இலங்கைக்கோஷ்டி பன்னிரெண்டு ஓட்டங்களால் அக்கோஷ்டியை வெற்றிபெற்றது.

48 ஓவர்களையே இப்பந்தயம் கொண்டிருந்தது. இலங்கைக்கோஷ்டி 7 விக்கட்டுகள் நட்டத்துக்கு 240ஓட்டங்களைப் பெற்றது. காப்டன் பந்துல வர்ணபுர 51ஓட்டங்களையும், றேய் டயஸ் 81 ஓட்டங்களைப் பெற்றனர்.

புதுடில்லி கோஷ்டி 7 விக்கட்டுகள் நட்டத்துக்கு 229 ஓட்டங்களைப்பெற்றது. அமரநாத் 40 ஓட்டங்களையும், அஸாத் 41 ஓட்டங்களையும் பெற்றார்.

இலங்கை கோஷ்டி எதிர்வரும் பதினேழாந்திகதி சென்னையில் ஒரு டெஸ்ட் பந்தயத்தில் இந்திய அணியுடன்மோதவிருக்கின்றது இங்கு இலங்கை வீரர்கள் செல்லவிருப்பது குறித்து பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் தமிழகப் பொலிசாரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (கி)

## பிரிட்டிஷ் பாதுகாப்புக்குழு இந்திய விஜயம்

புதுடில்லி, செப். 15

பிரிட்டிஷ் கடற்படைக் காப்டன் ஒருவரின் தலைமையின் கீழ் பாதுகாப்பதிகாரிகள் குழுவொன்று இந்தியா வந்துள்ளது.

இக்குழுவினர் இந்திய இராணுவ தளபதி திரு. கிருஷ்ணராவைச்சந்தித்தனர். அத்துடன் இவர்கள் 12தினங்கள் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து பல்வேறுபட்ட இராணுவ நடவடிக்கைகளையும்பார்வையிடுவர். (கி)

## ஆயுள்தண்டனை

சென்னை செப் 15

ரயில்வே தச்சுத் தொழிலாளி ஒருவருக்கு ஆயுள் காலச் சிறைத்தண்டனை வழங்கி சென்னை உயர் நீதி மன்ற நீதிபதி தீர்ப்பளித்தார்.

இந்த தொழிலாளி சீதனத் தகராறு தொடர்பாக தமது மனைவியை தீயிட்டுக் கொழுத்திக் கொலை செய்தார் என்று குற்றஞ் சாட்டப் பட்டிருந்தார். (கி)

## இந்திராவின் சோவியத் விஜயம்

புதுடில்லி, செப். 15

இந்திய பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தி இம் மாதம் 20ம் திகதி சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இவரின் விஜயத்துக்கான முன்னேற்பாடுகளைகவனிக்கும் பொருட்டு இந்திய வெளி விவகார அமைச்சர் திரு பி. வி. நரசிம்மராவ் மாஸ்கோ சென்றுள்ளார். (வெ)

## மணிவாக்கு

மரணத்துக்கு அஞ்சாதவர்களே உயிர்வாழத் தகுதியுள்ளவர்கள்.

— மெக் ஆர்தர்

# நமது நோக்கு

## அமெரிக்க - பிரிட்டிஷ் பிணக்கு?

ஆங்கிலத்தையே தாய் மொழியாகக் கொண்ட அமெரிக்காவும் பிரிட்டனும், அக்காரணத்தால் அந்நியோன்யமாக வாழ முடிகிறதென்று சிலர் நினைப்பதுண்டு

ஓரேமொழியால் ஒற்றுமைப்படாத, உண்மையில் பிளவு பட்டிருக்கும் இரு நாடுகள் உலகில் இருப்பதானல் அவை பிரிட்டனும் அமெரிக்காவும்' என்ற மறுத்தானைவிட்டவர் அறிஞர் பேர்னுட் ஷா.

கடந்த இரண்டாவது உலகமகா யுத்தத்தில், அவலம் நிறைந்த நெருக்கடிக் கட்டத்தில் அமெரிக்காவை தங்கள் உதவிக்கு இழுக்க அன்றைய பிரிட்டிஷ் பிரதமர் வின்ஸ்டன் சேர்ச்சில் கையாண்ட உபாயங்கள் பல.

ஆங்கிலத்தின் பெருமை, அதனை சேர்ச்சில் பேசிய எழுதிய திறமை, தமக்குத் தாய்ப்பாலுடன் தாய் மொழியையும் சேர்த்து ஊட்டிய தாயே ஒரு அமெரிக்க பெண்மணி என்ற பல உத்திகளைப் பிரயோகித்தார் பிரதமர் சேர்ச்சில்.

இவற்றின் உச்சத்தில் நிகழ்ந்த நகைச்சுவை நாடகம் மறப்பதற்கில்லை.

யுதத விவகாரங்களைக் கலந்தாலோசிக்க அன்றைய ஜனாதிபதி ரூஸ்வெல்டின் விருந்தினராக வெள்ளை மாளிகையில் தங்கியிருந்த பிரிட்டிஷ் பிரதமரை அவசியம் சந்திக்க வேண்டுமென்று தேடிய ஜனாதிபதி ரூஸ்வெல்ட் அவர் குளித்துக் கொண்டிருப்பதை அறிந்து தயங்கினர்.

தாமதிக்க முடியாத நிலையில் குளிக்கும் அறைக் கதவில் மெல்லத்தட்டி தான் யாரென்றுசொல்ல, உடனே கதவைத்திறந்த சேர்ச்சில், ''அமெரிக்காவுக்கு பிரிட்டன் எதனையும் ஒழிக்க மாட்டாதென்பதை நம்புங்கள்'' என்று சொல்ல, இருவரும் 'கொல்'! என்று சிரித்தார்களாம்.

சேர்ச்சிலின் அதியற்புத அரசியல் திறமை அமெரிக்காவை மட்டுமல்ல; ரஷ்யாவையே பிரமிக்கவைத்தது.

இன்றைய நிலை என்ன? Nato) நாட்டோவில் தலைமை வகிக்கும் அமெரிக்கா, திருமதி தாச்சரின் பெருநட்பை பெற்று வந்ததை நாமறிவோம்; ஆயினும் ''கடுஞ்சிநேகமும் கண்ணைக் கெடுக்கும்''. இன்று மோதிக்கொள்ளும் நிலை.

நாட்டோ தலைவர் ஜனாதிபதி ரீகன், ஐரோப்பிய விவகாரங்களில் 'தாம் இட்டது சட்டமென' நடந்து கொள்கிறர் என்ற கருத்து வலுப்பெற்றுவருகிறது.

''பணவீக்கம்''-இது எவ்வகையிலும் கட்டுப்படுத்த வேண்டுமென்ற போர்வையில் ரஷ்ய ஆட்சியில் திடமற்றநிலையைஉண்டுபண்ண நடவடிக்கைகள் எடுப்பதாக ஐரோப்பா கருதுகின்றது.

அந்தக் கருத்து பிரிட்டனில் பலம்பெற்றிருக்கிறது. ஐரோப்பாவிலேயே அமெரிக்காவுக்கு இருந்த ஆதரவு பிசுபிசுத்துப் போகிறதாகத் தோன்றுகிறது.

பிரிட்டனில் இயங்கும் அமெரிக்க கிளைக்கம்பனிகள் ரஷ்யாவுக்கு 'பைப்லைன்' உபகரணங்களை விற்பனை செய்யப்படாதெனகட்டளை விதித்திருந்தது.

ஜனாதிபதிரீகனின்இந்தக் கட்டளையை மீறி குறிப்பிட்ட விற்பனை நடைபெற வேண்டுமென அக்கம்பனிகளை பிரிட்டன் கேட்டிருக்கிறது. இது நியாயமே.

அமெரிக்க-பிரிட்டன் உறவைச் சாதாரணமாக விரும்பும் பிரிட்டிஷ் பிரஜைகள் மட்டுமல்ல, பிரமுகர்கள் பழைய பிரதமர் திரு. ஜேம்ஸ் கலகன் உட்படப் பலர் ஜனாதிபதி ரீகனின் தான்தோன்றித் தனத்தை ஆதரிப்பதாகவில்லை.

ஐரோப்பிய பொதுஜன அபிப்பிராயமே மாறுதல் அடையக்கூடும்.

## புதிய லெபனுன் ஜனாதிபதி தாமொன்றை நினைக்க...

இம்மாதம் 23ம் திகதி உத்தியோக பூர்வமாகப் பதவி யேற்கவிருந்த லெபனானின் புதிய ஜனாதிபதி பஷீர் கமாயல் நேற்று முன் தினம் சுட்டுக்கொல்லப்பட்ட செய்தி முற்ருக எதிர்பாராத செய்தியெனக்கருத முடியாது. ஜனநாயகத்தின் நுட்பக்கருத்துக்கள் வெளிவருகின்றன.

ஜனாதிபதி தேர்தல் உரிய காலத்தில் சட்டபூர்வமாக நடைபெற்றபோதும் லெபனானில் நிலவிய கோரயுத்தத்தின் காரணமாக லெபனானில் பல இஸ்லாமிய கட்சிகள் ஜனாதிபதி தேர்தலைப் பகிஷ்கரித்தன; இதனைத் தகுந்த சந்தர்ப்பமெனக் கொண்ட வலதுசாரிக்கிறீஸ்தவகட்சிகள் ஒருங்கு திரண்டு திரு, கமாயலை ஜனாதிபதி ஆக்கினர். வெற்றிவிழாக் கொண்டாடினர்.

சட்டரீதியாக தேர்தலில் குறைபாடு இல்லை; புதிய ஜனாதிபதியோ செயல் வீரர், அவருடைய தகப்பனரே நாட்டின் ஜனாதிபதியாக இருந்தவர். ஆளுமை மிக்க இளமை வளம் பொருந்திய ஜனாதிபதி கமாயல் இந்த சொற்பகாலத்தில், இஸ்ரேலியர்களுக்கு நட்புக்கரம் நீட்டி கடந்த சண்டைசச்சரவை மறந்து, சமாதானம் தழைக்க உழைப்பேனென்று உறுதி அளித்தார்; அமெரிக்காவின் நம்பிக்கையையும் பெறத் தொடங்கிவிட்டார்.

இருப்பினும் அடிப்படை எதிர்ப்பு – அதுவும் இஸ்லாமிய அரசியல் கட்சிகள் என்றால் பேசவேண்டுமா? அவருக்கு நாசம் விளைத்தது பலஸ்தீனியரின் பாதுகாப்புக்கும், இஸ்ரேலின் பகைமைக்கும் தீர்வுகாணும் வல்லமை இருந்தவராகக் கருதப்பட்டாலும் ஜனாதிபதி தேர்தல் ஏற்ற சூழ் நிலையில் செவ்வனே நடைபெறவில்லையென்பது அவருடைய சடுதி முடிவு நிரூபிக்கின்றது,

# ''பாரதியாருக்கு முத்திரை வெளியிடப்பட வேண்டும்''

## மானிப்பாய் எம். பி. 'தர்மர்' வற்புறுத்து

(யாழ்ப்பாணம்)

'இன்று இலங்கை இந்தியாவில் மட்டுமல்லாது தமிழ் பேசாதநாடுகளிலும் தமிழைப் பற்றி அறியாத நாடுகளிலும் பாரதியாருக்கு விழா எடுக்கப் பட்டுவருகின்றது. பாரதியாருடைய வாழ்க்கையை எடுத்தாலும்சரி கவிதைகளை எடுத்தாலும் சரி அவற்றுள் விஞ்சி நிற்பது விடுதலையுணர்வேயாகும்''.

இவ்வாறு குரும்பசிட்டி உதயதாரகை சனசமூக நிலையத்தால் எடுக்கபட்ட பாரதி விழாவில் பேசிய மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்க தெரிவித்தார்.

உதயதாரகை மன்றத் தலைவர் திரு.சி. கனகசுந்தரத்தின் வரவேற்புரையுடன் ஆரம்பமான இவ்விழாவிற்கு பண்டிதர் வ.நடராஜா தலைமைதாங்கினர். உதயதாரகை மன்றத் திறந்த வெளியரங்கில் நடைபெற்ற இவ்விழாவில் தொடர்ந்தும் அவர் பேசுகையில்:-

''பாரதியார் விடுதலையைப் பற்றி கூறியதிலிருந்து அன்னியராட்சியிலிருந்து மட்டும் விடுபடுவது விடுதலை அல்ல; மூடப்பழக்கவழக்கங்கள், மக்கள் விடுதலை, சாதிவேற்றுமை, அடக்குமுறைகள் போன்ற எல்லாவகையிலும் விடுதலை அடைதலே உண்மையான விடுதலை என்பதை அறியலாம். ஆனல் இன்றைய எமது நாட்டிலே அடக்குமுறைகளைக்கண்டு கொண்டு தான் இருக்கின்றோம். இதனல் பொருளாதாரத் துறையிலும் கூட விடுதலை காணவியலாது.

''பாரதியார் தான் முதன் முதலில் தொழிலாழிக்கு முக்கியத்துவம் கொடுத்துப் பாடியிருக்கின்றர். இந்த ஆவலால் தான் சோவியத் நாட்டைப் பற்றிப் பாடினர்.

''இந்த நாட்டில் சமத்துவம் விடுதலையைப்பற்றிப்பலர் பேசுகிறர்கள். இன்று இந்த நிலையில முக்கியமாகப் பாரதியாருடைய பங்கை எவரும் மறுசுகமுடியாது. எனவேஅரசு பாரதியாருக்கு முத்திரை ஒன்றைப்பொறிக்க முன்வரவேண்டும்''.

''கலை, கலாச்சார ரீதியில் பொதுவாகப் பல்வேறுதுறைகளில் மக்களை வழிநடத்தவும் சனசமூக நிலையங்கள் முக்கியத்துவம் வகிக்கின்றன. இன்று மன்னராட்சி ஒழுநது மக்கள் ஆட்சி நடைபெறுகின்ற நிலையில் இந்த சனசமூக நிலையங்கள் உயிர்நாடியாக விளங்குகின்றன.

ஒரு சனசமூக நிலையத்தில் திறமையான நிர்வாகிகள் மட்டும் இருந்தால் போதாது; அதனுடைய வளர்ச்சிக்கு மக்களுடைய ஒத்துழைப்பும் மிகவும் அவசிமானது என்றார்.

சட்டத்தரணி சோ. தேவராசா ''தேசியஇய கப்போக்குகளும் பாரதியும்'' என்ற விடயம் பற்றிப் பேசினர். வீ. எம். குகராஜா, எஸ். கே. குமார், எஸ்.இராஜேஸ்வரன் ஆகியோரின் பாரதி கவிதா நிகழ்வும் இடம்பெற்றது. தொடர்ந்து கலைநிகழ்ச்சிகள் நாடகம் ஆகியனவும் இடம்பெற்றன. செல்வன் கே. ஸ்கந்தமூர்த்தி நன்றியுரை கூறினர்.

## குட்டிமணியும் வட்டுக்கோட்டையும்

'சர்வதேச மன்னிப்புச்சபையினுலும், சர்வதேச ஜுரர்கள் சபையினுலும், தென்னுபிரிக்காவிலுள்ள மனிதவுரிமைகளை மறுக்கும் சட்டங்களிலும் மிக மிக மோசமான, கொடூரமானது என வர்ணிக்கப்பட்ட பயங்கரவாத தடைச்சட்டத்தினல் ஏற்படக்கூடியதும், ஏற்கனவே ஏற்பட்டிருப்பதுமான கேட்டை உலகுக்குப் பறைசாற்றி உலகின் கவனத்தை ஈர்ப்பதன் முலம், மேற்படி சட்டத்தை சட்டப்புத்தகத்தி

### மக்கள் கருத்து

லிருந்து நீக்கிவிடுவதற்கு வழி தேடும் முகமாக, சம்பந்தப்பட்ட சட்டத்திற்கு முதற் பலியாக இருப்பவர்களான மரணதண்டனைக்கு இலக்காகியிருக்கும் ஒருவரைத் தமிழர் விடுதலைக்கூட்டணி எதிர்வரும் ஜனதிபதி தேர்தலில் வேட்பாளராகப் போட்டிக்கு நிறுத்தவேண்டுமெனக் கேட்கப்பட்டிருக்கிறது. அப்படிக் கேட்டிருப்பவர்கள் மேற்படி சட்டத்தினல் எதிர்காலத்தில் மரணதண்டனையை எதிர் நோக்கியிருப்பவர்களான, பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டு, காவலில் வைக்கப்பட்டிருப்பவர்களே! அவர்களது வேண்டுகோளைத் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமையின் கவனத்துக்குக்கொண்டு வந்த தொடர்பாளராக இருந்திருக்கிறர் சட்டத்தரணியாகிய, தமிழர் விடுதலைக் கூட்டணியின் சட்டத்துறைச் செயலாளர்.

அயர்லாந்தில் விடுதலை இயக்கம் குற்றத்தீர்ப்புக்கு உள்ளாகி, சாகும்வரை உண்ணவிரதத்தை மேற்கொண்டுவந்த பொபி சான்டசை அங்கு நடைபெற்ற ஓர் இடைத்தேர்தலில் வேட்பாளராக நிறுத்தியதுபோன்று தானும் குட்டிமணியை ஜனதிபதி தேர்தலில் நிறுத்துவதா அல்லவா என்பதையே கூட்டணி ஆலோசித்திருக்க வேண்டும். மாருகத் தேர்தலையே எதிர்நோக்காத விகிதாசாரப் பட்டியல் முறையில் குட்டிமணியை வட்டுக்கோட்டைக்கு பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கலாமா? என்று கூட்டணி ஆலோசிப்ப

(5-ம் பக்கம் பார்க்க)

## புகழால் வாழி!

பொன்னர் புவியில் புனித இசைக்கலைக்கு
மின்னரும் நாகசுகரம் மேன்மைதரும் அன்னதனை
ஏந்தி இசைபெருக்கும் எங்கள் பதும நாதனின்று
வாய்ந்த விருதுபெற்றன் வாழ்த்து

பத்தா யிரம்வெள்ளிக் காசு பரிசிலென
இந்தா ரணிபகிழ ஈந்துவக்கும் பெந்துபுகழ்
ஈழத் தரசோ டின்பமுற வாழ்த்துவோம்
வாழியான கீர்த்தி வளர்ந்து

நாகசுரம் ஏந்திநின்று நாகபத்மநாதன் எனும்
மேகம் பொழிந்தஇசை மென்மழையால் —
ஓசைபெற்றே
இன்புற்றேம் அக்கலையை இன்னுயிராய்ப்
போற்றுமவன்
நன்புகழால் வாழி நயந்து.

- ச. விநாயகரத்தினம்

★ இன்று நாதசுர கானகலாநிதி நா. க. பத்மநாதன் ஜனதிபதி விருது பெறுவதைக் குறித்து வெளியிடப்படும் வாழ்த்து.

அல்வாய் சாமணந்தறை ஆலடி விநாயகர் ஆலய உற்சவம் கடந்த 11-ந் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெற்று தீர்த்தோற்சவத்துடன் நிறைவுபெறவிருக்கிறது.

## ஞானஒளி ஏற்றுகின்ற நாயகனே நீ வருக!!

அல்வாயூர் ஆலடிவாழ் ஐங்கரனே நீ வருக
அடியவரின் துயர்களையும் ஆனைமுகா நீ வருக
வேலவனின் மூத்தவனே விநாயகனே நீ வருக
வேண்டுமருள் ஈபவனே வித்தகனே நீ வருக

சிவசுதனே கணபதியே சிற்பரனே நீ வருக
செம்மைநெறி தருகின்ற கற்பகமே நீ வருக
பவவினைகள் தீர்க்கின்ற பாலகனே நீ வருக
பக்திதனை வளர்க்கின்ற பரம்பொருளே நீ வருக

ஞானஒளி ஏற்றுகின்ற நாயகனே நீ வருக
நமதல்லவை பாலிக்கும் நல்லவனே நீ வருக
மோனநிலை காட்டுகின்ற முத்தவனே நீ வருக
முத்திதரும் அற்புதனே முழுமுதலே நீ வருக

- அல்வாயூர் செ விவேகானந்தன்

## ★ ஜனாதிபதி தேர்தல்களம்

# "தனிநாட்டுக் கோரிக்கையை தமிழர் கூட்டணி முன்வைக்கட்டும்

## பூரண ஆதரவு வழங்குவேன்" என்கிறார் குமார்

(யாழ்ப்பாணம்

"தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து நான் போட்டியிட்டால் குறைந்த வாக்குகளையே பெறுவேன் என்று அஞ்சும் திரு சிவசிதம்பரம், தாராளமாக ஒரு கூட்டணி வேட்பாளரை இக்கோரிக்கையை முன்வைத்து நிறுத்தி எனக்கு கிடைப்போகும் வாக்குகளிலும் அதிகப்படியான வாக்குகளைப்பெற முயற்சிக்கட்டும். இதற்கு நான் பூரண ஒத்துழைப்பு வழங்குவேன்."

இவ்வாறு அகில இலங்கை தமிழ்காங்கிரஸ் கட்சி செயலாளரும்ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளருமான திரு குமார் பொன்னம்பலம் கிழக்கு மாகாணத்தில் திரு. சிவசிதம்பரம் நிகழ்த்திய உரையொன்றுக்கு பதிலளித்து விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

திரு. பொன்னம்பலம் இவ்வறிக்கையில் மேலும்கூறியிருப்பதாவது: "தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவராகவிருக்கும் திரு எம். சிவசிதம்பரம் அக்கட்சி ஜனாதிபதி தேர்தல் பற்றி உத்தியோக பூர்வமான ஒரு முடிவுஎடுக்கு முன்னரே நான் தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்தால் தோல்வியடைவேன் என்று கூறியுள்ளார். இது ஒரு பொறுப்பற்ற முறையில் அவர் தெரிவித்துள்ள கருத்தாகும்.

தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து தமிழர் விடுதலைக் கூட்டணி கடந்தபொதுத் தேர்தலில் போட்டியிட்ட போது தமிழ்மக்கள் அதற்கு தமது ஆதரவைத் தெரிவித்து அக்கோரிக்கையை ஏற்றுக் கொண்டனர் என்று திரு. சிவசிதம்பரம் கூறுகிறார். அப்படியானால் தமிழர்விடுதலைக் கூட்டணியினர் எதற்காக 1979ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தலின்போதும் 1981ம் ஆண்டு மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலின் போதும் தனிநாட்டுக் கோரிக்கையை தமிழ் மக்கள் மீண்டும் வலியுறுத்த வேண்டும் என்று ஒவ்வொரு கூட்டங்களிலும் கேட்டுக்கொண்டார்கள்.

தமிழ் தேசிய இனத்தை குழப்பத்திலாழ்த்தும் நோக்குடன் ஜனாதிபதித் தேர்தல் சிங்களஇன மக்களிடையே நடத்தப்படும் தேர்தல் என்று திரு. சிவசிதம்பரம் குறிப்பிட்டுள்ளார் ஆனால் ஜனாதிபதியின் ஆதிக்கம் நாடுமுழுவதும் செல்லுபடியாகும் என்பது இவருக்கு நன்குதெரியும். எனவே சிங்களப்பிரதேசத்துக்குரிய தேர்தல் என இதனைக்குறிப்பிடும் இவர்கள் எதற்காக தமிழ் ஈழத்துக்கு தாம் எதிர் என்று பகிரங்கமாக அறிக்கை விட்ட இ. தொ. க அபேட்சகரான திரு. எம் செல்லச்சாமியை 1977ம் ஆண்டு பொதுத்தேர்தலின் போது கொழும்பிலே மேடைகளில் ஏறி அவரை ஆதரித்து உரையாற்றினார்கள்?

தனிநாட்டுக் கோரிக்கையை தமிழ்மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர் மீண்டும் இக்கோரிக்கை இத்தேர்தல் மூலம் இலங்கைபூராகவும் வைக்கப் படுவதால் கடந்த பொதுத் தேர்தலிலும் பார்க்க இருமடங்கு வாக்குகள் இம்முறை கிடைக்கவேண்டும். (கி)

# "தமது 5 வருட சர்வாதிகார ஆட்சியை ஜே. ஆரே. உணர்ந்துள்ளார்"

## — கொப்பேகடுவ

(கொழும்பு)

"கடந்த ஐந்து வருடங்களாக தாம் நடத்திய சர்வாதிகார ஆட்சி குறித்து மக்கள் ஆத்திரமடைந்துள்ளதை ஜனாதிபதி ஜே ஆர். உணர்ந்துள்ளார் ஆகையினாலேயே 1984-ம் ஆண்டு வரையும் இருக்கும் அவரது ஆட்சிக் காலம் தொடர்ந்து நீடிக்குமா என்ற அச்சத்தினால் இரண்டு வருடங்கள் முன்பதாகவே இத்தேர்தலை வைத்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வேட்பாளரான திரு. ஹெக்டர் கொபேகடுவ மாவத்தகம தொகுதியில் நடைபெற்ற தமது பிரசாரக் கூட்டமொன்றில் உரையாற்றுகையில் இவ்வாறு கூறினர்.

அவர் மேலும் அங்கு பேசுகையில் கூறியதாவது:

"இந்த தேர்தல் ஒரு தந்திரமான தொன்று. எதிர் வரும் நவம்பர் மாதம் பெரும் சுமை மிகுந்த வரவு செலவுத் திட்டத்தை மக்கள் முன்னிலையில் எவ்வாறு சமர்ப்பிப்பதென அரசாங்கம் அஞ்சுகிறது எனவே மக்களின் நோக்கை மாற்றவும் இத்தேர்தலை அவர்கள் உபயோகிக்கிறார்கள்.

நான் கடந்த அரசாங்கத்தில் காணி அமைச்சராக இருந்தபோது வெளிநாட்டுக் கம்பனிகளும் தனியார்களும் மேலதிகமாக வைத்திருந்த காணிகளைச் சுவீகரித்து நிலமற்றவர்களுக்கு அவற்றை வழங்கினேன் இதனால் எனது வீடும் சில தீயசக்திகளினால் குண்டு வீசித் தாக்கப்பட்டது.

ஆனால் இன்று அரசாங்கம் தனக்கு கடந்த பொதுத்தேர்தலில் நிதியுதவிசெய்தவர்களுக்கு மீண்டும் சுவீகரித்த காணிகளை வழங்கி வருகின்றது" [கி)

# "வாக்குச்சீட்டால் புள்ளடி போடமட்டும் இன்று உரிமை!"

## — வாசுதேவ

(கொழும்பு)

"அரசாங்கம், மக்களின் ஜனநாயக உரிமைகளை மதித்து அவற்றைப் பாதுகாத்து வருவதாகக் கூறி வருகின்றது. ஆனால் வாக்குச்சீட்டில் புள்ளடிபோடும் உரிமையொன்றைத் தவிர மற்றவையெல்லாம் பறிக்கப்பட்டுவிட்டன".

இவ்வாறு நவலங்கா சமசமாஜக் கட்சியின்சார்பில்ஜனாதிபதித் தேர்தலில் குதிக்கவுள்ள திரு. வாசுதேவ நாணயக்கார ஜா-எலயில் நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

திரு. வாசுதேவ மேலும் இக்கூட்டத்தில்கூறியதாவது:–

"நிறைவேற்று அதிகாரம் கொண்டவராக ஜனாதிபதியை உருவாக்கியிருக்கும் தற்போதைய அரசியலமைப்புச் சட்டம் ஒழிக்கப்படல் வேண்டும் இதற்கு தற்போது ஜனாதிபதியாக விருப்பவர் தோற்கடிக்கப்படுவதே சிறந்த வழியாகும்.

மக்கள் விடுதலை முன்னணியினர் 1971-ம் ஆண்டு பல இளைஞர்களும் யுவதிகளும் இரத்தஞ்சிந்தி புரட்சி நடத்திய வேளையில் முன்னணியில் நிற்பதுபோல் பாசங்கு செய்து தம்மைப்பாதுகாத்துக் கொண்டனர். இன்று இவர்கள் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்றனர் ஆனால் எமது நவலங்கா சமசமாஜக் கட்சி இவர்கள் போட்டியிடுவதைக் கண்டு அஞ்ச வில்லை. (கி)

## வேட்பாளர் பார்வை

# கிளிநொச்சியில்!

(கிளிநொச்சி)

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவுள்ள கட்சிகளின் கவனம் வடபகுதியில் கிளிநொச்சியிலே ஈர்க்கப்பட்டுள்ளது. இத்தொகுதியில் இலங்கையின் பலபாகங்களையும் சேர்ந்த பல்வேறு பகுதி மக்களும் கணிசமான அளவில் வாழ்கின்றனர். யாழ்ப்பாணம், திருமலை. மட்டுநகர் மக்கள் மட்டுமன்றி மலையக மக்களும் இங்கு வாழுகின்றனர். அது மட்டுமன்றி யாழ். மாவட்டத்திலேயே இத்தொகுதிதான் கேந்திர ஸ்தானத்தையும் வகிக்கின்றது. எனவேதான் சகல கட்சிகளின் கவனமும் இந்த தொகுதியில் ஈர்க்கப்பட்டுள்ளது. மக்கள் விடுதலை முன்னணியினர் இத்தொகுதியில் முகாமிட்டு தொடர்ந்து பிரசாரத்தை மேற்கொண்டுள்ளனர். ஐக்கிய தேசியக்கட்சியினரும் தமிழ்க்காங்கிரசும் அடுத்த மாத முதல்வாரத்தில் இங்கு தான் தமது பிரசாரத்தை ஆரம்பிக்கப்போகின்றனர். ஜனாதிபதியாகிய பின்பு திரு ஜே, ஆர். ஜெயவர்த்தனா யாழ் மாவட்டத்திற்கு வருகைதரவில்லை. தேர்தல் நிமித்தம் இங்கு ஜனாதிபதி முதலில் கிளிநொச்சியிலேயே தனது பிரசாரத்தை மேற்கொள்ள உள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது இத்தொகுதியில் உள்ள முக்கிய பிரமுகர்களுக்கு ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவுள்ள கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா தம்மை ஆதரிக்கும்படிகோரி கடிதங்களையும் அனுப்பியும் உள்ளார்.

# நாளை வல்லிபுர ஆழ்வார் ஆலயம் கொடியேறுகிறது

(புலோலி)

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார்சுவாமி கோவில் வருடாந்த மகோற்சவம் நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது

வருடாந்த மகோற்சவத்தையொட்டி ஆலயத்திற்கு வருகைதரவுள்ள பக்த அடியார்களின் பாதுகாப்பு, சுகாதாரவசதிகள் என்பனவற்றை வழங்குவது சம்பந்தமாக பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு வை. வேலும்மயிலும் தலைமையில் மகாநாடொன்று நடாத்தப்பட்டு இதற்கான ஒழுங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நாளை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 23ம் திகதி பெருமான் வெளிவீதிவருதல் திருவிழாவும் 25ம் திகதி வெண்ணெய் திருடல் விழாவும், 26ம் திகதி பாம்புத் திருவிழாவும், 27ம் திகதி துகிலுரிதல் திருவிழாவும், 28ம் திகதி மகா கம்சன் போர்த் திருவிழாவும், 30ம் திகதி சப்பறத்திருவிழாவும், 1ம் திகதி இரதோற்சவமும், 2ம் திகதி கடல் தீர்த்தோற்சவமும் 3ம் திகதி கேணித் தீர்த்தோற்சவமும் கொடியிறக்கமும், 4ம் திகதி ஆஞ்சனேயர் மடையும் நடைபெறுமென ஆலயதர்மகர்த்தா சபையினர் அறிவித்துள்ளனர்.

# அக்கராயன் குடியேற்றத் திட்டத்தில் யானைகள் அட்டகாசம்

## உயிர்களுக்கு ஆபத்து; வீடுகள்நாசம்!!

(புலோலி)

அக்கராயன்குளம் குடியேற்றத்திட்டப் பகுதியில் யானைகள் புரிந்து வரும் அட்டகாசத்தினால் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டு வருவதுடன் வீடுகளும் நாசம் செய்யப்பட்டு வருகின்றன.

கடந்த சில தினங்களாக இப்பகுதியில் யானைகள் குடியேற்றவாசிகள்மீது கோரமான தாக்குதல்களைத் தினமும் நடாத்திவருகின்றன. கடந்த ஞாயிற்றுக்கிழமை யானைகளின் அட்டகாசத்தின் போது ஒருவர் கோரமான முறையில் யானைகளினால் மிதித்துக் கொல்லப்பட்டார்.

பத்துக்கு மேற்பட்ட வீடுகளும் நாசம் செய்யப்பட்டு உள்ளன. சென்ற வருடமும் இத்தகைய யானைகளின் அட்டகாசத்தின்போது பலர் கொல்லப்பட்டு இருந்தனர்.

இதுசம்பந்தமாக உடன் நடவடிக்கைகள் மேற்கொண்டு ஏழை விவசாயிகளைப் பாதுகாக்கும்படி உயர் அதிகாரிகளைக் கோரியும் இதுவரையும் எவருமே தமக்கு உதவ முன்வரவில்லை. என்று பிரஸ்தாபக் குடியேற்றவாசிகள் முறையிட்டுள்ளனர்.

## ★ காங்கேசன் மூன்றும் கட்டம்:

# நிரந்தர நியமனம் வழங்கக் கோரிக்கை

[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறை சீமந்து தொழிற்சாலை 3ம் கட்டப் பிரிவில் கடமைபுரியும் கிராம அபிவிருத்திச் சங்கத் தொழிலாளர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரிக்கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சருக்கு மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

ஒப்பந்த அடிப்படையில் வேலைசெய்யும் இத்தொழிலாளர்கள் தாம் கடந்த பல மாதங்களாக மேற்படி பிரிவில் கடமைபுரிந்து நன்கு பயிற்சி பெற்றுள்ளதாகவும் குறிப்பிட்டு தமது வேலைத்திறமை, அனுபவம் என்பவற்றைக் கருத்திற்கொண்டு நிரந்தர நியமனங்களை வழங்குமாறும் தமது மகஜரில் கோரியுள்ளனர்.

கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சார்பில் கடமைபுரியும் 1200 தொழிலாளர்கள் கையொப்பமிட்டு இந்த மகஜரை அனுப்பியுள்ளனர்.

ஜனாதிபதி, சீமந்துக் கூட்டுத்தாபனத் தலைவர், யாழ். அபிவிருத்திசபைத் தலைவர், எதிர்க்கட்சித்தலைவர் ஆகியோருக்கும் இதன் பிரதிகள் அனுப்பப்பட்டுள்ளன.

அடிக்கடி ஆட்குறைப்பு கிராம அபிவிருத்திச் சங்க தொழிலாளர்கள் அடிக்கடி வேலை நீக்கம் செய்யப்பட்டுவந்துள்ளார்கள்.

## குட்டிமணி...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தாகப் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

ஜனாதிபதி தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி ஜே ஆரை. எதிர்த்து வேட்பாளர் ஒருவரை நிறுத்தமாட்டாது என்று ஏதும் இரகசிய வாக்குறுதி கொடுத்திருந்தாலன்றி இவ்விதம் தமிழர் விடுதலைக் கூட்டணி தடுமாறக் காரணம் இல்லை. சட்டவிலக்கு எதுவும் தடையாக இராதவிடத்து கூட்டணி குட்டிமணியை ஜனாதிபது தேர்தலுக்கு நிறுத்துவதற்கு வேறு காரணமில்லாதபோது வட்டுக்கோட்டையைப் பற்றிச் சிந்திப்பானேன்?

கோவை மகேசன்

தமிழீழ விடுதலை அணி

யாழ்ப்பாணம்.

## மோசடி வழக்கு

[சாவகச்சேரி]

மிருசுவிலைச் சேர்ந்த எஸ். இராசநாயகம் என்பவர் அவ்வூரைச்சேர்ந்த பொன்னுத்துரை கனகசபாபதியிடம் வெளிநாட்டில் உத்தியோகம் பெற்றுத்தருவதாக 4,500 ரூபாவைமோசடிசெய்திருந்தார். இவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் தொடர்ந்து சிலகாலம் இருந்து பின் பிணையிற் சென்றார்.

விசாரணையின் பின் இவர் பணத்தைக் கொடுக்க சம்மதம் தெரிவித்து சட்டத்தரணி வி. பி கார்த்திகேசு மூலம் தவணை கோரினர்.

முறைப்பாட்டுக்காரர் சார்பாக சட்டத்தரணி சீ. பாலக்கிருஷ்ணரின் அனுமதியுடன் 4,500 ரூபாவையும் ஒரே முறையாக ஐப்பசி 24 க்கு முன் செலுத்த வேண்டும் இல்லையேல் மறியலுக்குச் செல்ல வேண்டி வரும் என எச்சரிக்கை செய்தார்.

# அரசு பாராட்டுப் பெற்ற கலைஞர்கள் நாளை கௌரவிக்கப்படுகின்றார்கள்

(கொழும்பு)

அரசாங்கத்தின் பரிசையும், பாராட்டையும்பெற்ற நாதஸ்வர கலாநிதி என்.கே.பத்மநாதன் பிரபலபாடகர் அல்ஹஜ் மொஹிதீன்பெக் ஆகிய இருவரையும் பாராட்டிக் கௌரவிக்குமுகமாக நாளை வெள்ளிக்கிழமை தேநீர் விருந்துபசாரம் அளிக்சப்படும்.

சில இலக்கியப் பத்திரிகை நண்பர்கள் ஏற்பாட்டில், பம்பலப்பிட்டி கிறீன்லண்ட்ஸ் ஹோட்டலில் வெள்ளிக்கிழமை மாலை ஆறு மணிக்கு நடைபெறும் இப்பாராட்டுக் கூட்டத்துக்கு இலங்கைஉழைக்கும் பத்திரிகையாளர் சங்கத் தலைவர் திரு. இ. சிவகுருநாதன் தலைமைவகிப்பார்.

# "நெடுந்தீவு மக்களின் பிரயாண சேவைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும்"

(நெடுந்தீவு)

"மதவாச்சி வரையுமான நிர்வாகப் பொறுப்புகள் என்னிடம் இருந்தபோதும் மிகவும் கஷ்டமான நெடுந்தீவு மக்களின் பிரயாண சேவைக்கு முக்கியத்துவம் கொடுத்து நல்ல முறையில் படகுச்சேவை இடம்பெற நான் கூடியகவனம் செலுத்திவருகின்றேன். இங்கு ஆலோசிக்கபட்ட விடயங்கள் குறித்து இணக்கமான முடிவுகளை எடுத்துள்ளோம் அனைத்தையும் விரைவில் செயலாக்குவேன்.

இவ்வாறு நெடுந்தீவு படகுச் சேவையில் உள்ள சில பிரச்னைகள் குறித்து தீர்வுகாணும் பொருட்டு நெடுந்தீவுமுன்னேற்றக்கழகம் நடத்தியஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய வடபிரதேச யந்திரப் பொறியியலாளர் திரு. என். நித்தியானந்தன் கூறினார்.

கழகத் தலைவர் திரு. என். இலட்சுமணராசா பேசுகையில் நெடுந்தீவு படகுச் சேவையின் வரலாற்றில் கழகத்திற்கு தனி இடமுண்டு என்றும் கடந்த எட்டுமாததில் எமது மக்கள் எவ்வித கஷ்டங்களுக்கும்உள்ளாகாமல் சௌகரியமாகச் சென்று வருகின்றனர் என்றும் இதற்காக நாங்கள் எமது இயந்திரப்பொறியியலாளருக்கும், பாராளுமன்ற உறுப்பினருக்கும் மகிழ்ச்சி தெரிவிக்கின்றோம் என்றும் கூறினார். எமது பிரதிநிதி தனது தொகுதியின் அபிவிருத்திக்காக சிறப்பான நடவடிக்கைகளை எடுத்தாலும் நெடுந்தீவுக்கு எல்லாவற்றிலும் பார்க்க முக்கியத்துவம் கொடுத்து வருகின்றார் என்றும் நெடுந்தீவு முன்னேற்றக்கழகம் அடிக்கடி த்தீவின் தேவைகளைத் தெரிவிப்பது குறித்து அவர் குறைகளைத் தீர்க்க துரித ஏற்பாடுகளை எடுத்துவருகின்றார் என்றும் அவர் மேலும் கூறினார்,

நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் திரு. சிவ சங்கரப்பிள்ளையும் அண்ணாமறுமலர்ச்சி மன்றத் தலைவர் திரு. இ. தர்மரத்தினமும் ஒரு தடவைக்கு ஒரு ஆடு எடுத்துச் செல்ல அனுமதிக்கம்படவேண்டுமெனவும் பிரயாணி ஒருவர் தன்னுடன் சுமார் 2 கிலோ எடை கொண்ட பொருட்களை எடுத்துச் செல்லவும் அனுமதிக்க வேண்டுமென வலியுறுத்தினர்கள். நெடுந்தீவில் இருந்து காலை 7 மணிக்குப் புறப்படும் படகுச் சேவையில் சிறிது மாற்றம் ஏற்படுத்தவேண்டுமெனவும் பிரதேச சபைத்தலைவர் கேட்டுக்கொண்டார்.

தொழில் வாய்ப்புகளை நெடுந்தீவு மக்களுக்கே வழங்க வேண்டுமெனவும் அம்புலன்ஸ் படகு தற்சமயம் சேவையில் இல்லாததால் இராக்காலங்களில் அவசர சிகிச்சைக்காக நோயாளரை எடுத்துச்செல்ல அனுமதிக்கப்படவேண்டுமெனவும் இதற்கானமேலதிகவேலைக்கான கட்டணங்கள் எதுவும் படகு ஊழியர்களுக்கு வழங்கப்படத் தேவையில்லை எனவும் கிழக்கு கிராமோதயசபை தலைவர் திரு. நா. இராமச்சந்திரன் தெரிவித்தார்.

குறிப்பிட்ட சேவையைத் தாங்கள் மேலதிக ஊதியம் இன்றிச் செய்யத் தயாராக இருப்பதாக கூட்டத்தில் கலந்துகொண்ட படகு ஊழியர்கள் தெரிவித்தனர். மத்தி கிராமோதய சபைத் தலைவர் திரு.க.அநதோனிபபிள்ளை உட்பட எட்டு பொதுத்தாபனங்களின் பிரதிநிதிகளும் கருத்துரைகளை வழங்கியதுடன் பிரதேச இயந்திரப் பொறியியலாளருடன் பொதுமக்களும் நல்லமுறையில் ஒத்துழைத்து மேலும் சிறப்பான படகுச் சேவை நெடுந்தீவுக்குக்கிடைக்கச் செய்யவேண்டுமென அனைவரும் கேட்டுக்கொண்டனர்.

ஈழத்துத் திருநெறித்

## தமிழ்மன்ற 10-வது ஆண்டுவிழா

(யாழ்ப்பாணம்)

ஈழத்துத் திருநெறித் தமிழ் மன்றத்தின் பத்தாண்டு நிறைவுவிழா சனிக்கிழமை நடைபெறுகிறது.

பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் சனிக்கிழமை மாலை நடைபெற விருக்கும் இவ்விழாவுக்கு, பேராசிரியர் கா கைலாசநாதக் குருக்கள் தலைமை வகிக்கின்றார்.

## எதிரி விடுதலை

(சாவகச்சேரி)

கத்தியால் வெட்டிப் படுகாயமுண்டாக்கியதாகக் குற்றம் சாட்டப்பட்ட தாளையடியைச் சேர்ந்த தங்கவடிவேல் ரணசிங்கம் விடுதலைசெய்யப்பட்டார்.

இவ்வழக்கு பளை சுற்று நீதிமன்றத்தில் நீதிபதி எம். எச் காரியப்பர் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது

82 மே, 17ல் மருதங்கேணியைச் சேர்ந்த ஆறுமுகம் தனபாலசிங்கம் என்பவரைக் கத்தியால் வெட்டி படுகாயமுண்டாக்கியதாகத் தாளையடியைச் சேர்ந்த ரணசிங்கம் என்பவருக்கு எதிராகக் குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

முறைப்பாட்டுக்காரர் மன்றிற் சமூகமளிக்கத் தவறியதால் நீதிபதி எதிரியை விடுதலைசெய்தார்.

# நல்லூர் கல்வி வளநிலையத்துக்கு இந்திய அரசின் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே நீண்டகாலமாக நெருங்கிய தொடர்பு இருந்து வருகிறது. 1935ம் ஆண்டு வரை யாழ்ப்பாணத்திலுள்ள முக்கிய கல்லூரிகளிலெல்லாம் இந்திய ஆசிரியர்கள் சிறந்த கல்விச்சேவை ஆற்றிவந்தனர். அந்தமரபின் தொடர்ச்சியாகவே கல்வி வளர்ச்சிக்கு உதவும் திரைப்படக்கருவியை இந்திய அரசின் சார்பில் அந்நாட்டு பதில் தூதுவர் திரு. ஆர் எம். அய்யங்கார் நல்லூர் கல்வி வளநிலையத்துக்கு வழங்குகிறார்''

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும் நல்லூர் எம். பியுமான திரு. மு. சிவசிதம்பரம், நல்லூர் கல்வி வளநிலையத்துக்குத் திரைப்படம் காட்டும் கருவி அன்பளிப்புச்செய்யும் வைபவத்துக்குத் தலைமைவகித்துப் பேசுகையில் கூறினார்.

யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் இவ் வைபவம் நடைபெற்றது.

இவ் வைபவத்தில் இந்தியத் தூதுவரின் உதவியாளர், திரு ஆர். வாசுதேவா, யாழ் மாவட்ட அபிவிருத்திசபைத் தலைவர் திரு. சு. நடராச, அபிவிருத்திசபை உபதலைவர் திரு. எஸ். நாகராசா, வடமாநில கல்விப்பணிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளை உட்பட பல உயரதிகாரிகளும் சமூகமளித்திருந்தனர்.

திரு. சிவசிதம்பரம் தொடர்ந்து பேசுகையில், பாரத நாட்டிலிருந்து வந்த கல்விமான்களிடம் கல்விகற்றவர்கள் தான், இன்று யாழ்ப்பாணத்தில் தலைசிறந்த ஆசிரியர்களாகவும், டாக்டர்களாகவும் பொறியியலாளர்களாகவும் வழக்கறிஞர்களாகவும், ஏன் அபிவிருத்திசபைத் தலைவராகவும் இருக்கிறார்கள்'' என்று புகழாரம் சூட்டினார்.

''பாரதத்தின் முன்னாள் தூதுவர் மேதகு தோமசு ஏபிரகாம் அவர்கள் நல்லூர் கல்விவளநிலையத்துக்கு வருகை வந்தபோது அதன் பணிகளாற் கவரப்பட்ட அதன் செயற்பாட்டை மேம்படுத்தும் வகையில் திரைப்படக் கருவியை வழங்குவதாக உறுதியளித்தார். அவர்கள் வழங்கிய உறுதிமொழியை மேதகு அய்யங்கார் அவர்கள் இன்றுசெயற்படுத்துகிறார்கள். தூதுவர் அவர்களுக்கும் பாரதஅரசுக்கும் பாரத மக்களுக்கும் நாம் நன்றி கூறுகிறோம். ஒவ்வொருமுறையும் இக் கருவியை உபயோகிக்கும் போது நாம் பாரத மக்களையும் அரசையும் நன்றியுடன் நினைத்துக்கொள்வோம். இக் கருவி எமது மாணவர்களின் கல்விஅறிவை மேம்படுத்த உதவும் என்பது உறுதி என்று திரு. சிவசிதம்பரம் சொன்னார்.

வட்டாரக்கல்வி அலுவலர் திரு. சு. சிவநாயகமூர்த்தி வரவேற்புரை நிகழ்த்தினார்.

இளைப்பாறிய கல்லூரி அதிபரும் கல்விவளநிலைய முகாமைக்குழு உறுப்பினருமான திரு இ. சபாலிங்கம் ''கல்வி வளநிலையத்தின் குறிக்கோள்களும் தொழிற்பாடுகளும்'' என்ற பொருளில் உரையாற்றினார்.

வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. ம. சிமியாம்பிள்ளை கல்விஅமைச்சின் சார்பில் பாரதத்தூதுவரிடமிருந்து அன்பளிப்பைப் பெற்றுக்கொண்டார்.

நிலைய முகாமைக்குழு உறுப்பினரான திரு. க. சி. குலரத்தினம் நன்றியுரை கூறினார்.

தொழிலதிபர் திரு. க. கனகராசா, உதவித் தூதுவரிடம் சேர் பொன் இராமநாதனின் வாழ்க்கை வரலாறு நூலை அன்பளிப்புச்செய்தார்,

(மா)

# வடஇலங்கை சங்கீதசபை பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்

வட இலங்கை சங்கீதசபை நடாத்திய 7-ம் ஆண்டு மிருதங்கம், நடனம், (பரதம், கதகளி) பண் இசை, நாடகம் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன இப்பெறுபேறுகள் தொடர்ந்து 'ஈழநாடு' இதழில் வெளிவரும். நடனம் — பரதம் முடிவுகள் இங்கு தரப்படுகின்றன.

## கோப்பாய்

### முதலாம் பகுதி

### சாதாரண சித்தி

நித்தியராணி விக்கிரமசிகம் பரதம், நிஷாந்தி மகாதேவா பரதம், சிவாநந்தினி பரமேஸ்வரன் பரதம், சுகந்தினி பொன்னம்பலம் பரதம்,

## தெல்லிப்பழை

### முதலாம் பகுதி

### முதலாம் பிரிவு

சதாஜினி ஆறுமுகம் பரதம், ஹெரதனிக்கா அந்தோனிப்பிள்ளை பரதம், ஈஷானி வேல்முருகன் பரதம், வனஜா பாலசுப்பிரமணியம் பரதம் அம்பிகை வேதாரணியம் பரதம், தமயந்தி பத்மநாதன் பரதம், கயல்விழி நாகேந்திரம் பரதம், நிரஞ்சலா விவேகானந்தராசா பரதம்,

### இரண்டாம் பிரிவு

ஸ்ரீமதி தங்கவேல் பரதம், வாசுகி சுப்பிரமணியம் பரதம் சுகுணா சிவசுப்பிரமணியம் பரதம, பிறேமசேழினி மாசிலாமணி பரதம், இமெல்டா புஷ்பம் அருளானநதம் பரதம், யசோதா செல்வராசா பரதம, குகபாலிகா இராமலிங்கம் பரதம், வசுகி பாலசுந்தரம் பரதம், தேவகி சுப்பிரமணியம் பரதம், ஜானகி சுப்பிரமணியம் பரதம் கீதாஞ்சலி அரியரத்தினம் பரதம, நளாயினி அரியரத்தினம் பரதம், கிருஷந்தி பாலகிருஷ்ணன் பரதம், சுபாஜினி பத்மசேகரம் பரதம், பாமினி சிவலோகநாதன் பரதம், ராஜி கனகலிங்கம் பரதம், மைதிலி அருளைய்யா பரதம், தயானந்தி கதிரவேலு பரதம், சுதாஜினி குலேந்திரன் பரதம், சுதர்சி சுந்தரலிங்கம் பரதம், சுதர்சனா பொன்னுத்துரை பரதம் சரத்தினம் பரதம், கோமதி ஞானரத்தினம் பரதம், சுபோதினி துரைசிங்கம் பரதம், ராதா பாலசுந்தரம் பரதம், உமா பாலசுந்தரம் பரதம், சுகந்தி செல்வரத்தினம் பரதம் பரத

பத்மலோஜினி நடராஜா, தில்லானா சுமங்கல்யா சபாரத்தினம், இராஜலட்சுமி சரவணபவன், கேதீஸ்வரி நடராசா, மிருணாளினி பாலகிருஷ்ணன், தாரிணி சிவலோகநாதன், சுஜித்தா திருநாவுக்கரசு, சுகந்தகுமாரி சின்னத்துரை, சுகர்ணா விமலராசா, தர்சினி பதுமசேகரம், சிறீவாணி சபாரத்தினம், ஜெயந்தி யோகலிங்கம், சிவாயினி கதிரவேலு, வரதா சடாட்சரலிங்கம்ம, கௌரி ஆறுமுகம, சுகுமாரி சுந்தரலிங்கம், ஜெயக்குமாரி சுந்தரலிங்கம், சசிகலா அருணாசலம், ஜெயநாயகி போல் பரதம், பாமினிதேவி பொன்னுத்துரை பரதம், கலையரசி கணபிள்ளை பரதம், சிவராகினி சிவராசலிங்கம் பரதம், ரஜனி பத்மநாதன் பரதம், சுபாஜினி துரைராசா பரதம், ஜனித்தா புலோறி கந்தையா பரதம், நவரஜனி நவரத்தினம் பரதம், றஞ்சினி செல்லத்துரை பரதம், மைதிலி சிவபாதசுந்தரம் பரதம், அஞ்சலா நடராஜா பரதம், பிரதாயினி யோகேஸ்வரன் பரதம், தயாநந்தி செல்லத்துரை பரதம்.

## நடனம் - பரதம் பருத்தித்துறை

### முதலாம் பகுதி

### முததாம்பிரிவு

பரதம்: நிர்மலா செல்லையா, ஜெயஸ்ரீ தனநாயகம், அல்லி அருமைத்துரை.

### இரண்டாம்பிரிவு

பரதம்: சுசரிரதா தியாகலிங்கம், சிவரூபிணி கனகசபை, ஜெரின்மேரி ஜோர்ஜ், ரஜனி ஞானச்சந்திரன, சாமந்தி பத்மநாதன், கமலவதனா பாலசுப்பிரமணியம், தாரிணி முத்துலிங்கம், வளர்மதி சொக்கலிங்கம், மீனலோசனி கதிரமலை, ஜானகி பூரணச்சந்திரன், வனிதா செல்வராசா, இளஞ்செல்வி கயிலாயா,

### சாதாரணசித்தி

கலைவாணி ஆழ்வான் பரதம், தேவகி சிவராஜசிங்கம் பரதம், செந்திரு ஸ்ரீதரன் பரதம், விஜயலட்சுமி சுப்பையா பரதம், ரதி தனபாலசிங்கம் பரதம், மதிவாணி சிவராசா பரதம், கிருஷ்ணவேணி வேலாயுதம் பரதம், ரோகினி துரைராசா பரதம், தமயந்தி விக்னேஸ்வரன் பரதம், இளம்பிறை சிவானநந்தம் பரதம். (தொடரும்)

## தெல்லிப்பழை

### முதலாம்பகுதி

### இரண்டாம் பிரிவு

பிரியதர்சினி அமிர்தலிங்கம் பரதம், சித்திரா நவரத்தினம் பரதம், ஆனந்தி சிவசம்பு பரதம், ரஜனி தப்பிராசா பரதம் தளினா சிவசுப்பிரமணியம் பரதம், மிதிலா இந்திரநாதன் பரதம், ராதா டாட்சரலிங்கம் பரதம், கௌதமி விஸ்வலிங்கம் பரதம், நொயலீன் சிவசௌந்தரநாயகம் பரதம், ருஜீவி இராஜரட்ணம் பரதம், ஜானகி வயித்திலிங்கம் பரதம், றமணி பரமானந்தம் பரதம், கல்யாணி பூர்ணசந்திரன் பரதம். சுகன்யா பழனிவேல் பரதம்,

### சாதாரண சித்தி

அக்னெஸ் ஞானேஸ்வரி ஜோர்ஜ் பரதப், ஆன்ஞானேஸ்வரி ஜோர்ஜ் பரதம், சீதாதேவி சின்னத்துரை பரதம், மீரா பரம்சோதி பரதம், கிரிஜா சிங்கராஜா பரதம், தேவினா சிவசுப்பிரமணியம் பரதம், கௌதமி விஜயரத்தினம் பரதம். நளினி இரா

## களனிகங்கை நீரில் நச்சுத்தன்மை

[கொழும்பு]

களனி கங்கை நீரில் நச்சுத்தன்மை ஏற்பட்டுள்ளது. இதனால் இங்குள்ள மீன்கள் செத்துமிதக்கின்றன.

இந் நீரில் குளிக்கவோ, குடிக்கவோ வேண்டாமெனவும், மீன்களை உட்கொள்ள வேண்டாமெனவும் பொதுமக்கள் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

[வெ]

## ராஜினமா

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளர் திரு. ஞா. சின்னையா தமதுபதவியிலிருந்து திடீரென ராஜினாமாசெய்துள்ளார்.

# காரைநகர்-அனுராதபுரம் புதிய பஸ்சேவை

(சரவெட்டி)
வடபிராந்தியப் போக்குவரத்துச்சபை காரைநகர்சாலையினுல் காரைநகரிலிருந்து அநுராதபுரம் வரை புதிய பஸ் சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது

காலை 6-15க்குக் காரைநகரிலிருந்து புறப்பட்டுச் செல்லும் இந்த பஸ் அனுராதபுரத்தை நண்பபல் 12-30 மணிக்கு அடைந்து, அங்கிருந்து 12-45க்குக் காரைநகரை நோக்கிப் புறப்படும். (அ)

## தொடர்ந்து விளக்க மறியல்

(சாவகச்சேரி)
பளையைச் சேர்ந்த கார்த்திகேசு அன்னலிங்கம் என்பவர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

மனைவிக்கு எரிகாயமுண்டாக்கி மரணத்தை விளைவித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட இவ்வழக்கு பளை நீதிமன்றத்தில் நீதிபதி எம். எச். காரியப்பர் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது.

எதிரி சார்பாகச் சட்டத்தரணி ஸ்ரீசிவாய, சட்டத்தரணி செ அம்பிகைபாலனின் அனுசரணையுடன் ஆஜரானுர். வீட்டிலே ஏற்பட்ட சச்சரவு காரணமாக அழகேஸ்வரிக்கு மண்ணெய் ஊற்றிப்படுமோசமான எரிகாயமுண்டாக்கினுராம் அழகேஸ்வரி யாழ். அரசினர் வைத்தியசாலைக்குஅனுப்பப்பட்டு அவர் மரணமானுர்.

இதனையடுத்து அழகேஸ்வரியின் கணவனுன கார்த்திகேசு அன்னலிங்கம் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது.


ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சரத்பாபு - சுபாஷினி
நெஞ்சத்தை கிள்ளாதே
(கலர்)

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி: 6-15, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஞானக்குழந்தை

ராஜா (யாழ். நகர்)
4 காட்சிகள்
பிரதாப்-ராதிகா
வசந்தத்தில் ஒரு வானவில்
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன்
[யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
ஆயிரம்வாசல் இதயம்

லிடோ
தினசரி
[யாழ்ப்பாணம்] 10-30, 2-15, 4-45, 7-15, 9-30
DEATH DIAMENTIoN

ஸ்ரீதர் (யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்-மஞ்சுளா-லதா
நேற்று இன்று நாளை
எமது அடுத்த வெளியீடு
நம் நாடு

றீகல் Daily 5 Shows
[யாழ்.நகர்]
MAN FROM HONGKONG
(Adults only)
17-9-82 முதல்
முரட்டுக்காளை

சாந்தி யாழ்.நகர்]
16—17
Daily 5 Shows
CITY OF SIN

ராணி (யாழ் நகர்) இன்று 76வது தினம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-சுஜாதா-ஸ்ரீதேவி
விஸ்வரூபம்
[ஈஸ்ட்மன் கலர்]

மனோகரா (யாழ்ப்பாணம்)
10-30, 2-15, 4-45, 7-15, 9-30
WANG YU in
BLOOD OF THE DRAGON
(Scope—Color—Karate Film)

5-வது மகளிர் வாரம்
வின்ஸர் தினசரி 4 காட்சிகள்
(யாழ்.நகர்)
✶ சந்திரசேகர் ✶ சுபாஷினி ✶ ராஜீவ்
நடித்த
பாலைவனச்சோலை
இசை; சங்கர் கணேஷ். (கலர்)


# இன்றைய பலன்

ஆவணி மாதம் 31-ம் திகதி
வியாழக்கிழமை
(16—9—82)

மேடம்: கனிவான நினைவுகளின் மத்தியில் இன்று வாழ்க்கையை நடத்துவீர்கள் பெரியவர்களின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும் மீறினல் உத்தியோகத்தரின் செல்வாக்கு வளர்பிறையாகும்.

இடபம்: கடமையாற்றும் இடத்தில் இருந்து புதிய நண்பர்களைத் தேடிக்கொள்வீர்கள் பொறியாளருக்கு பொன்னான தினம் வேண்டியவரிடமிருந்து வரவேற்கத்தக்கசெய்திகிடைக்கும்.

மிதுனம்: உழைப்பினுல் முன்னேற்றம் ஏற்டும் வியாபாரத்துறையில் விருத்தியுண்டு தாய்வழிப் பொருள் வரவுக்கும் இடமுண்டு உயர் கல்வியில் ஈடுபட்டவர்கட்கு உட்சாக தினம்.

கடகம்: குறுக்குவழியில் இறங்குவதால் சட்டத்தின் பிடியில் மாட்டிக்கொள்ளக் கூடும் திரைமறைவில் உங்கள் நடவடிக்கைகள் கண்காணிக்கவும் படலாம்.

சிங்கம்: ஆசைவார்த்தைகளின் மூலம் உங்களிடமிருந்து அகப்பட்டதைச் சுருட்டுவதற்கு சிலர் முனைவார்கள் இனம் தெரியாத வேதனையால் தாக்கப்படுவீர்கள் நிதானம் விரும்பத்தக்கது.

கன்னி: வார்த்தைஜாலம் செய்வதில் வல்லவராய் காட்சி அளிப்பீர்கள் பொதுசனத் தலைமைக்கும் இடமுண்டு துரித வேகத்தில் ஒரு சுறுசுறுப்பான பயணம் மேற்கொள்ளப்படலாம்.

துலாம்: தூக்கம் விழிகளைத் தழுவ மறுக்கும். கடந்தகால நிகழ்ச்சிகள் அலை மோதும். சகோதரவழியால் சஞ்சலத்துக்கும் இடமுண்டாம். பொறுமை நன்று.

விருட்சகம்: வாழ்க்கை இன்று வசதி நிறைந்ததாக இருக்கும். அயலவர்கள் உங்களை அன்புடன் அழைப்பார்கள் அன்னைவழி மூலம் ஆதரவும் பெருகக்கூடும்.

தனு: உள்ளத்தில் உவகை துள்ளும் உறவினர்களின் வருகை வாழ்க்கையில் வசதி நிறைந்ததாக இருக்கும். மனதில் புதிய எண்ணங்கள் தலைதூக்கும் எதிலும் புதுமையையே நீங்கள் விரும்புவீர்கள்.

மகரம்: எதிர்பார்த்த காரியத்தில் தடைகள் ஏற்படும். அவசரமுடிவு ஆபத்தில் சிக்கவைக்கலாம். குடும்பத்திலும் அதிக பதட்டநிலையும் தென்படும்.

கும்பம்: கற்கண்டு போல் இனிக்கும் வாழ்க்கை காதல் விவகாரங்கட்கு இடமுண்டு களஸ்திரவழியின் மூலம் கனதனமும் சேரக்கூடும்.

மீனம்: எண்ணியகாரியத்தில் ஏமாற்றம் தென்படும் நண்பர்கள் மூலம் நஷ்டம் அடைவதற்கு இடமுண்டு கூட்டுவியாபாரத்தில் மோசடி நடக்கலாம் நன்ருக சிந்தித்த பின்பு செயலாற்றவும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## வீடு தீப்பற்றியது

(பண்டத்தரிப்பு)
பட்டப்பகலில் ஒரு வீடு தீப்பற்றி முற்ருக எரிந்தது சாம்பரானது.

வடலியடைப்பைச் சேர்ந்த எஸ். தங்கவேல் என்பவரின் வீடே இவ்வாறு சாம்பரானது.

இதுசம்பந்தமாக பொலிசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

# மீண்டும் யாழ். பாடசாலைகள் உதைபந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம்)
சென்ற ஆண்டு தவிர்க்க முடியாத காரணங்களினுல் நிறுத்தப்பட்டிருந்த கல்லூரிகள் உதைபந்தாட்டப் போட்டிகள் மீண்டும் இவ்வருடம் ஆரம்பிக்கப்பட இருக்கின்றது.

இதற்கான உத்தியோக பூர்வமான அனுமதிவழங்கப்பட்டிருப்பதாகவும் பூ வாங்க ஏற்பாடுகளைச் செய்ய யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் இம்மாதம் 20 ந் திகதி யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் கூடவிருக்கிறது என்றும் செயலாளர் திரு. நா சோமசுந்தரம் தெரிவித்துள்ளார்.

பாடசாலைகள் மத்தியில் இச்செய்திபெரும் வரவேற்பையும் உதைபந்தாட்ட ரசிகர்கள் மத்தியில் பெரும் குதூகலத்தையும் இத்தகவல் ஏற்படுத்தியிருப்பதாகக் கூறிய அவர், வழமைபோல பாடசாலை மைதானங்களில் இரண்டாம் மூன்றும், பிரிவுப்போட்டிகளும் பொதுமைதானமொன்றில் முதலாம் பிரிவுப் போட்டியும் இடம்பெறுமெனவும் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் உத்தயோகத்தர்களை நியமனம்செய்யுமெனவும் குறிப்பிட்டார். (மா)

## நெடுந்தீவில் திறந்தவெளி அரங்கு

[நெடுந்தீவு]
நெடுந்தீவு நிலாஜோதி நாடக மன்றம் குருநகர்ப் பகுதியில் திறந்த வெளியரங்கு ஒன்றை அமைக்கவுள்ளது. இதற்கான அடிக்கல்லை,நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம் நாட்டி வைத்தார். (அ)

## மகாதேவா ஆச்சிரம வெள்ளி விழா

(கிளிநொச்சி)
''இந்துமத வளர்ச்சிக்குப் பெருந்தொண்டாற்றிய மகாதேவா சுவாமிகளின் பெயரால் 1957ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மகாதேவா ஆச்சிரமம் இருபத்தைந்து ஆண்டுகளைக் கடந்து வெள்ளிவிழாக் காண்பது மகிழ்ச்சிதரும் சம்பவமாகும்'' என்றுகிளிநொச்சி ஜெயந்தி நகர் மகாதேவா ஆச்சிரம வெள்ளி விழாவிற்குத் தலைமைவகித்து உரையாற்றுகையில் பிரஸ்தாப ஆச்சிரம நிர்வாகி வடிவேல்சுவாமிகுறிப்பிட்டார்.

விழா ஆரம்பமாவதற்கு முன்பு கிளிநொச்சி முருகன் ஆலயத்தில் இருந்து நூற்றுக்கு மேற்பட்ட அடியார்கள் பாதயாத்திரையாக ஆச்சிரமத்தை வந்தடைந்தனர்.

வடிவேல் சுவாமிகள் மேலும் பேசுகையில்; ''ஈழத்தில் சமய வளர்ச்சிக்கு வித்திட்ட சாஜன் சுவாமிகள் சின்மயனந்தசுவாமிகளிடம் ஞான உபதேசம் பெற்றவர் அவரிடம் ஞானஉபதேசம் பெற்றவரே கனகரத்தின சுவாமிகளாவார். இவரிடம் கற்றுத் தேர்ந்து ஞானஉபதேசம்பெற்றவர் மகாதேவ சுவாமிகள், மகாதேவாசுவாதுகளின் முயற்சியால் ஆரம்பிக்கப்பட்டதே கரம்பன் சண்முகானந்தவித்தியாசாலை, கர்தர்மடம் சிவகுருநாதர் பீடம் ஆகியவை மகாதேவா சுவாமிகளின் பெயரால் ஆரம்பிக்கப்பட்டதே இந்த ஆச்சிரமம் இருபத்தைந்து ஆண்டுகளாகப் பலவித சமயப்பணிகளை மேற்கொண்டு இன்று வெள்ளி விழாக்காண்பதில் நாம் மிகவும் மகிழ்ச்சி அடைகிருேம்'' என்ருர்.

யாழ்.பல்கலைக் கழக விரிவுரையாளர் திரு. ச. விநாயகமூர்த்தி, ஆசிரியர்கள் திரு. வே.பரமநாதன் உட்படப் பலர் உரையாற்றினுர்கள். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. [அ]

## இன்று ஆரம்பமாகும் 3 ம் நாள் விழா

அரியாலை)
யாழ்ப்பாணம் கிறிஸ்தவ ஐக்கிய சங்கத்தின் 15 வது ஆண்டு நிறைவு விழாவும் எழுப்புதல் கூட்டங்களும் (இன்று) மாலை யாழ்ப்பாணம் கோட்டைத் தேவாலயத்தில் ஆரம்பமாகிறது

தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெறும் எழுப்புதல் கூட்டங்களில் தென்னிந்திய திருச்சபை திருச்சி, தஞ்சாவூர் மறை மாவட்டப் பேராயர் பேரருள் திரு. கலாநிதி ஆர். போல்ராஜ் ஆண்டகை அருளுரை நிகழ்த்துவார்கள்.

18ந் திகதி சனிக்கிழமை மாலை 4 மணியளவில் யாழ்ப்பாண கிறிஸ்தவ ஐக்கிய சங்கத்தின் தலைவரும், தென்னிந்திய திருச்சபையின் யாழ். மறைமாவட்டப் பேராயருமான பேரருள் திரு. டி. ஜே. அம்பலவாணர் ஆண்டகை தலைமையில் 75 வது ஆண்டு விழாப் பொதுக்கூட்டம் நடைபெறும். (அ)

## கோப்பாயில் ஐ. நா. சங்கம்

(கோப்பாய்)
''ஐக்கிய நாணய சங்கம் மக்களின்பொருளாதார வளத்தையும் கூட்டுறவான அமைப்பையும் உருவாக்குவதுடன் மக்களின் சேமிப்பு வங்கியாகவும் செயற்படும் நிலையனஸ்தாபனமாகும்'' என்று கோப்பாயில் அங்குரார்ப்பணம் செய்யப் பெற்ற சூரியோதய ஐக்கிய நாணய சங்கப் பொதுக் கூட்டத்திற்குத் தலைமை வகித்து சிறப்புரையாற்றிற வட பிராந்திய கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. எஸ். தணிகாசலம் கூறினுர்.

சூரியோதய சனசமூக நிலையத்தில் நடைபெற்ற இக் கூட்டத்திற்கு, கூட்டுறவுப் பரிசோதகர் திரு. எஸ். வாமதேவனும், வலி கிழக்கு தெங்குபனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கப் பெது முகாமையாளர், கணக்காளர் ஆகியோர்களும் விசேஷ பிரதி நிதிகளாகக் கலந்து கொண்டனர்.

சங்க உத்தியோகத்தர் தெரிவில் சமூகரத்தினம் எம். கே. இளையப்பு தலைவராகவும், திரு மு. நா. பூ' நாகராசா உப தலைவராகவும், திரு.நா. பாஸ்கரன் செயலாளராகவும், செல்வி யா. பார்பரு பொருளாளராகவும், திருவாளர்கள் வே. தம்பிராசா, கு. செல்லையா, க. செல்வநாயகம் ஆகியோர் உறுப்பின்ராகவும் ஏகமனதாகத் தெரிவு செய்யப் பெற்றனர். (அ)

## ''அதிகாரங்கள் கிடைக்கும்''

[யாழ்ப்பாணம்]
''கிராமோதய சபைகளுக்கு கூடிய அதிகாரங்கள் கிடைக்கவுள்ளன. கிராமசபைகளின் அதிகாரங்களை கிராமோதைய சபைகளுக்கு கிடைக்க உள்ளன.

இவ்வாறு யாழ். மாவட்ட சபை உறுப்பினர் திரு ந இராசேந்திரம் பத்தமேனி கிராமோதய சபையின் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்'

# மகாதேவா பாலம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சி முதல்வர் திரு. அ. அர்தலிங்கம் கூட்ட ஆரம்பத்தில் இருந்தபோதிலும், மகாதேவாபால வேலை பற்றிய தீர்மானம் எடுக்கப்படுவதற்கு சற்று முன்னதாக சபையிலிருந்து வெளியேறி விட்டார். எம். பிக்களான திரு சிவசிதம்பரம், பண்டிதர் கா. பொ. இரத்தினம், திரு. வி. தர்மலிங்கம், திரு. ஆ மு ஆலாலசுந்தரம், திரு. ரி. இராசலிங்கம், திரு. வெ. யோகேஸ்வரன் ஆகியோரும், உறுப்பினர்களில் திரு, சி. நாகராசா, திரு. இராசேந்திரம், திரு. க தம்பிமுத்து, திரு ஆ, நடராசா, திரு. ஜே. கு. அழகையா, திரு. க. சின்னத்துரை, திரு. சு. நடேசு ஆகியோரும் சமூகமளித்திருந்தனர்.

தேநீர் இடைவேளைகூட இல்லாமல் கூட்டம் தொடர்ந்து நடைபெற்றது.

''1982 ம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் மகாதேவா பால அமைப்பு வேலைக்கென ஒதுக்கப்பட்ட 22 லட்சம் ரூபாவுடன் மேலும் எட்டுலட்சம் ரூபாவை சபைநிதியிலிருந்து ஒதுக்குவதுபற்றி சபையில் தீர்மானத்துக்கெடுக்கப்பட்டது,

பண்டிதர் கா பொ. இரத்தினம் பேசுகையில்; தொகுதி வீதம் 22 லட்சப் பணம் ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளது. மாவட்ட அமைச்சரும் 82 ம் ஆண்டு பணம் தருவதாக உறுதியளித்தார். அப்பணத்தை ஏன் அவர் ஒதுக்கவில்லை. அதைப் பெறுவதற்கு முயற்சி எடுங்கள்'' என்று சொன்னார்.

அபிவிருத்தி சபைத்தலைவர் திரு சு. நடராசா பேசுகையில், 'மகாதேவாபாலம் அமைப்பதற்கு துரிதகதியில் பாதையை போட்டு முடிக்க வேண்டும் அதற்குப் பணம் அத்தியாவசியமாகத் தேவைப்படுகிறது'' என்றார்.

திரு. தர்மலிங்கம் குறுக்கிட்டு 'எங்கே பணம் இருக்கிறது?' என்று கேட்டார்.

தலைவர் திரு. நடராசா 'நாங்கள் அபிவிருத்தி வேலைகளுக்கு ஒதுக்கிய பணம் செலவுசெய்யப்படாமல் இருக்கிறது என்று சொன்னதும், பண்டிதர் இரத்தினம், திரு. ஆலாலசுந்தரம், திரு. இராசலிங்கம், திரு. சின்னத்துரை. திரு. நாகராசா ஆகியோர் ஒரே தொணியில் எழுந்து குரலெழுப்பினர்கள்.

சபை ஒழுங்கைக் கவனித்து உறுப்பினர்கள் நடந்து கொள்ளவேண்டும் என்று மேசையிலிருந்து மணியை அடித்து அமைதியை நிலைநாட்டினர் தலைவர்.

'எந்த வேலைக்கு ஒதுக்கப்பட்ட பணத்திலிருந்து இப்பணம் எடுக்கப்பட்டதென்று கேட்ட திரு. தர்மலிங்கம், 'நீங்கள் அபிவிருத்தி வேலைகளைச் செய்யாமலிருந்தால் அதற்கு ஒதுக்கப்பட்ட பணத்திலிருந்து ஒரு சதமேனும் எடுக்கவேண்டாம்' என்று கூறினர்.

'இந்த எட்டு லட்சமும் யாழ். மாவட்ட சபையினுல் வசூலிக்கப்பட்ட வரிப்பணமா? அல்லது பன்முகப்படுத்தப்பட்ட பணமா? என்று கேட்டார் திரு. ஆலாலசுந்தரம். அவர் தொடர்ந்து பேசுகையில், யாழ். மாவட்டத்தில் இருக்கும் இரு ஆசிரிய பயிற்சிக்கலாசாலைகளிலும் [பலாலி கோப்பாய்) குறிக்கப்பட்ட ஆசிரிய மாணவர்களே பயிற்சி பெறக்கூடியதாக இருக்கிறது. மேலும் அதிகமானவர்கள் பயிற்சி பெறுவதற்குப் போதிய இடவசதியில்லை. மற்றும் பாதைகள், மின்சாரம் போன்றவை அபிவிருத்தி செய்யப்படாமலிருக்கின்றன' என்றார்.

'மகாதேவா பாலம் எங்களுக்கு எவ்வளவு முக்கியமோ அதேபோன்று வைத்தியசாலை, ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை விஸ்தரிப்பு ஆகியவையும் முக்கியம்தான்' என்றும் திரு, ஆலாலசுந்தரம் ஆவேசமாகப் பேசினர்.

தலைவர் திரு. நடராசா; நகராட்சிப் பணத்திலிருந்து ஏற்கனவே ஒதுக்கப்பட்ட பணம் இந்த எட்டு லட்சம் போதியதாக இல்லை. மீதி வேலைகளுக்கும் பிரதமருடன் பேசிப் பெறுவோம்.'

திரு. சின்னத்துரை பேசுகையில், 'மக்கள் கொடுத்த வரிப் பணம் இது. அதே நேரம் ஊராட்சிமன்றங்களிலுள்ள தெருக்கள், திருத்தம் செய்யப்படவில்லை, மின்சாரம் அமைக்கப்படவில்லை'' உன்று கூறினர்.

யாழ்.எம். பி. திரு. வெ. வெ. யோகேஸ்வரன் உரை நிகழ்த்துகையில் 'தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் மகாதேவாபாலம் முக்கியமானது. கோப்பாய் எம். பி.யின் கூற்றை முற்றுமுழுதாக நான் நிராகரிக்கிறேன். இந்தமுறையல்ல அடுத்த வருஷமும் 8 லட்சம் ரூபா ஒதுக்கவேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார்.

''கல்லூரி அடுத்த வருடம் கட்டலாம்; பாதைகள்அடுத்த வருடம் போடலாம்; மின்சாரமும் அப்படியே செய்யலாம்; ஆனல் மகாதேவாபாலம் தொடர்ச்சியாக செய்யவேண்டியதொன்று; எமது சந்ததிக்கு அத்தியாவசியமானது'' என்று திரு.வி.யோகேஸ்வரன் வலியுறுத்தினர்.

திரு. சி நாகராசா பேசுகையில்; ''திரு. யோகேஸ்வரனும், திரு. ஆலாலசுந்தரமும் கூறியதை ஏற்றுக்கொள்கிறேன். உள்ளூராட்சி மன்றங்களிலிருந்து எடுத்தபணம் என்று தலைவர் சொன்னது அதிர்ச்சியையும், மகிழ்ச்சியையும் தருகிறது என்றார்.

''சிலதிட்டங்களை இங்கு உருவாக்குகிறோம்; அதுவேறு மாதிரி அமைந்துவிடுகிறது என்று கோப்பாய் எம். பி. சொன்னதை நினைவுபடுத்திய, திரு. நாகராசா, இவ்வாண்டும் இப்பணத்தை ஒதுக்காமல் அடுத்த வருடம் ஒதுக்கவேண்டும்''என்று கேட்டுக்கொண்டார்.

திரு. த. இராசலிங்கம் பேசுகையில், தமது பகுதியில் அபிவிருத்திவேலைகளுக்கு ஒதுக்கிய பணத்தில் இதுவரை எந்தவிதமான வேலைகளும் செய்யப்படவில்லை என்றார்.

தலைவர் திரு. நடராசா பதிலளித்துப் பேசுகையில், 'புதிய ஆஸ்பத்திரி கட்ட ஒதுக்கிய 50 லட்சம் ரூபாயில், கட்டிடக்கலைஞர் திரு. வி. எஸ். துரைராசா போட்ட மாதிரிப்படத்தின்படி 13 லட்சம் ரூபா மிச்சம்பிடித்துத்தந்துள்ளார். அதிலிருந்து 8 லட்சம் ரூபாவை எடுத்து மகாதேவா பால வேலைகளுக்குப் பயன்படுத்துவோம் என்றார்.

திரு. சிவசிதம்பரம் விவாதத்தை முடித்துவைக்குமாப் போல், இத்தீர்மானம் நிராகரிக்கப்பட்டதாக இருக்கக் கூடாது என்றும், எதிர்கட்சித் தலைவர் மற்றும் எம். பிக்கள் ஆகியோருடன் அபிவிருத்தி சபைத் தலைவரும் சேர்ந்து பிரதமரைச் சந்தித்து, பால அமைப்பு வேலைகளுக்கு நிதி ஒதுக்குவது குறித்துப் பேசுவோம் என்றும், அடுத்த கூட்டத்தில் ஒரு முடிவு எடுத்துக் கொள்வோம் என்றும் சொன்ஞர்.

தலைவர் இத்தீர்மானத்தை அடுத்த கூட்டத்துக்கு ஒத்தி வைத்தார். (மா)

## இன்று முதலாவது ஆண்டுவிழா

[கரவெட்டி]

கரவெட்டி மேற்கு உச்சில் கிராம அபிவிருத்திச் சங்கத்தினதும் கரவெட்டி மேற்கு மெதடிஸ்த சபையினதும் முதலாவது ஆண்டுவிழா இன்று வியாழக்கிழமை இரவு நடைபெறவுள்ளது

மேற்படி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் ஆசிரியர் திரு வா. ஆழ்வாப்பிள்ளை தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில், யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு சு. நடராசா, உடுப்பிட்டி எம். பி. திரு க. இராசலிங்கம், பனம்பொருள் அபிவிருத்தி சபைத்தலைவர் திரு. க. நடராசா, யாழ். மாட்ட அபிவிருத்திசபை உறுப்பினர் திரு. ந. இராசேந்திரன், யாழ். திட்டமிடல் அதிகாரி திரு. எஸ். சுவாமிநாதன், குடும்பத் திட்டமிடல் அதிகாரி திரு. எஸ். பூவேந்திரன் ஆகியோர் உரைநிகழ்த்துவர். [மா]

# ஒரு லட்சம் ரூபா நகைகள் முல்லைத்தீவில் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவிலுள்ள ஒரு வீட்டில் 1 47,700 ரூபா பெறுமதியான நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு சுங்க வீதியைச் சேர்ந்த எஸ். பி. சவரிமுத்து என்பவரின் வீட்டிலேயே இக்கொள்ளைச் சம்பவம் நடைபெற்றுளது.

முல்லைத்தீவுப் பொலிசார் இச்சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் (மா)

# வல்வெட்டித்துறை கொள்ளை: பொலிசாரிடம் சிக்கிய சந்தேகநபர் றிமாண்டில்!

[புலோலி]

சைக்கிளில் சென்றுகொண்டிருந்த நபரை வழிமறித்து அவரிடமிருந்த 900 ரூபா பணத்தைப் பறித்துக் கொண்டு செல்கையில் பொலிசாரிடம் அகப்பட்டுக்கொண்ட இளைஞர் கோஷ்டியைச் சேர்ந்த மூவரை றிமாண்டில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் திரு வி பி சுதந்தரலிங்கம் உத்தரவிட்டார்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த நபரொருவர் இரவு வேளையில் வீட்டை நோக்கிச் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது இளைஞர்கோஷ்டியொன்று அவரை வழிமறித்து அவரிடமிருந்த 900 ரூபா பணத்தைப் பறித்துக்கொண்டு ஓடியதாகவும், அவர்களைத் தெரியும் என்றும், பணத்தைப் பறிகொடுத்த இந்நபர் வல்வெட்டித்துறைப் பொலிசில் புகார் செய்திருந்தார்.

இச்சந்தேநபர்களை முறைப்பாட்டுக்காரர் அடையாளம் காட்டியதைத் தொடர்ந்து சந்தேகநபர்களான மூன்று இளைஞர்களும் பொலிசாரினுல் கைதுசெய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட இச்சந்தேகநபர்களான மூன்று இளைஞர்களும் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு வி. பி. சுந்தரலிங்கம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது சந்தேகநபர்களை றிமாண்டில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். [க]

## கன்னியகுமரி அம்மன் சிலை மீட்பு

சென்னை, செப். 15

கன்னியகுமரி அம்மன் சிலை களவாடப்பட்டதைத் தொடர்ந்து தமிழகப் பொலிசார் தீவிர தேடுதலை மேற்கொண்டபோது; அம்மன்சிலை இரண்டு பகுதிகளாக்கப்பட்டு இரு வெவ்வேறு கிணறுகளில் போடப்பட்டிருந்ததைக் கண்டுபிடித்துப் பொலிசார் சிலையை மீட்டுள்ளார்கள். இக்கன்னியாகுமரி அம்மன் சிலை 13 கிலோகிராம் நிறையுடையது. (உ)

## 3 இராணுவத்தி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கடந்த ஜூன் மாதத்தில் இதுஓர் கொலை என மல்லாகம் நீதிபதி தீர்ப்பளித்தபோதும் இதுதொடர்பாக பொலிசார் வழக்குத்தொடர இதுவரையும் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை.

இதுபற்றி நீதிபதியும் ஏற்கனவே விசாரித்த சமயம் இச்சம்பவம் தொடர்பான சகல விபரங்களும் சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அங்கிருந்து பதில் எதுவும் கிடைக்கவில்லையென்றும், பதில் கிடைத்த பின்னரே வழக்குத் தொடர்வது பற்றி ஏற்பாடுகளை மேற்கொள்ளலாமெனவும் பொலிசார் தெரிவித்திருந்தனர்.

மேற்படி மூன்றுஇராணுவத்தினரும் மீண்டும்நேற்று மல்லாகம நீதிமன்றத்தில் ஆஜரானசமயம் இவர்கள் மீது மேல்நடவடிக்கை எதுவும் எடுக்கவேண்டாமென சட்டமாஅதிபர் கடிதம் அனுப்பியுள்ளதாகதெரிவிக்கப்பட்டது

நீதிபதி திரு. சீ. வி. விக்னேஸ்வரன் தமக்கும் இக்கடிதம் கிடைத்துள்ளதாகக்கூறி இதன்பிரதிகள் சந்தேகநபர்களுக்கும், பொலிசாருக்கும் அனுப்பட்பட்டிருக்கிறதா?என வினவினர்

சந்தேகநபர்கள் தமக்குக் கடிதம் கிடைத்துள்ளதாக தெரிவித்தனர்.

ஆனல் காங்கேசன்துறை பொலிஸ் சார்ஜன்ட் திரு. தியாகராஜா காங்கேசன்துறை பொலிசாருக்கு இதுபற்றி அறிவித்தல் எதுவும் வரவில்லையென தெரிவித்தார்.

இதையடுத்து நீதிபதி பொலிசாருக்கு அறிவித்தல் கிடைக்காமையால் இம்மாதம் 20ம் திகதிக்கு இவ்விடயத்தை ஒத்திப்போடுவதாகவும், அன்று இதுபற்றி ஆராயலாமெனவும் கூறி விசாரணையை ஒத்தி வைத்தார்.


# ஹோம் பிரின்ஸ் லிமிட்டெட்

## புதிய உல்லாச பஸ்சேவை

தினசரி மாலை 8-30 மணி கொழும்பில் இருந்து----யாழ்ப்பாணத்துக்கு
தினசரி மாலை 8-00 மணி யாழ்ப்பாணத்தில் இருந்து-----கொழும்புக்கு
கண்ணியமான பாதுகாப்பான பஸ்சேவை

யாழ்ப்பாணத்தில் டிக்கற் பெறுமிடங்கள்:-

(1) ஹோம் பிறின்ஸ் லிமிட்டெட்
இல: 82, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 8310

(2) யாழ். ஐக்கிய வியாபார சங்கம்
இல: 420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 370—438—537

(3) யாழ். மெட்டல் சேல்ஸ் சென்ரர்
இல: 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 7596

(4) குயிக் ட்ரவல்ஸ் அன்ட் டூர்ஸ்
சரஸ்வதி கார்டின்ஸ், சேர்ச் லேன், சாவகச்சேரி
தொலை பேசி இல; 273. சாவகச்சேரி

கொழும்பில் டிக்கற் பெறுமிடங்கள்:

(1) ஹோம் பிறின்ஸ் லிமிட்டெட்
இல: 463, காலி வீதி, கொள்ளுப்பிட்டி.
தொலைபேசி இல: 89190

(2) ரவீந்திரா ஸ்டோர்ஸ்
இல: 285, காலி வீதி, வெள்ளவத்தை.

(3) லங்கா பம்பே சுவீட் ஹவுஸ்,
இல.105,ஒல்கொட் மாவத்தை,புறக்கோட்டை.
தொலைபேசி இல; 22830

(4) ஸ்ரீமணிமலர் ஸ்டோர்ஸ்
இல: 157/2, ஸ்ரீகதிரேசன் வீதி, கொழும்பு—11
தொலைபேசி இல: 23277

(5) நியூ புஷ்பா ஸ்டோர்ஸ்
இல; 127, காலி வீதி. பம்பலப்பிட்டி.
தொலைபேசி இல:88866


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி, 68-ம் இல [illegible] 1982 [illegible] செப். 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/8 [illegible]
Eelanadu — P. O. Box 49 Telegram: 'Eelanadu' T'phone: 389 and 8126.